உ

பராதேவி துணை.

குறவஞ்சி

[தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம்,
அகண்டவெளிக் குறம்]

சென்னை

V. S. வாலாம்பாள் அம்மாளால்

பிரசுரிக்கப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE COMMERCIAL PRESS, MADRAS, S. E.

1915.

Price Annas 3.] [விலை அணா 3

முகவுரை.

இதில்

தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம்

அகண்டவெளிக் குறம்

என வழங்கும் மூன்று பாடல்கள் அடங்கியிருக்கின்றன.

ஸ்ரீ பார்வதியம்மனே குறப்பெண் வடிவாய் வந்து சில ஸ்திரீகளுக்கு அவர்களுடைய உள்ளங்கை ரேகைகளைப் படித்துக் குறி சொல்லியதாக ஏற்பட்டவை.

தர்மாம்பாள் குறம் என்பதில் காவேரியம்மனுக்கு கடலோடு சேர உபாயஞ்சொல்லி அனுக்கிரகம் செய்ததாகவும், மற்றவை யிரண்டிலும் ஆத்தும ஞானம் அடையப் பக்குவமான சில ஸ்திரீகளுக்கு அவர்களடைந்திருக்கும் பக்குவத்தையும் அந்த ஞானத்தை யடையவேண்டிய மார்க்கத்தையும் சொல்லியதாகவும் அமைக்கப் பட்டிருக்கிறது.

கலியாண காலங்களில் சொல்லத்தகுந்த காவேரியம்மன் கப்பல் ஒன்று தர்மாம்பாள் குறத்தின் முடிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆத்தும போதமடையப் பக்குவமான

எல்லா ஸ்திரீகளுக்கும்

இந்தக்

குறவஞ்சிகளைச்

சமர்ப்பிக்கிறேன்.

V. S. வாலாம்பாள்.

உ

பரதேவி துணை.

தர்மாம்பாள் குறம்.

கடவுள் வணக்கம்.

(கண்ணிகள்.)

1. சரணமய்யா கணபதியே சரஸ்வதியே முன்னடவாய்
ஆறுமுக வேலவனே அன்புடனே துணைவருவாய்

2. பார்வதியாள் குறவடிவை பக்தியுடன் நான்பாட
அறம் வளர்த்த நாயகியின் அழகான குறம்பாட

3. காவேரிக்குக் குறிகள்சொன்ன கதையை நானும் எடுத்துரைக்க
விக்கினங்களில்லாதே விநாயகரே முன்வருவீர்.

லோபாமுத்திரை காவேரி நதியாக வருதல்.

4. ஸஹ்யமலை தனில்பிறந்து சமுத்திரரை மாலையிட
அகஸ்தியரை பிரிந்துமவள் அரியபெரும் நதியாகி

5. தட்சணத்தின் கங்கையென்றும் ஜலரூபந் தனையடைந்து
ஜலரூபியாய் காவேரி யென்னும் திருநாமத்துடனே வந்தாள்

6. குடகுமலை தன்னைவிட்டு காடுசெடி மலைதாண்டி
பர்வதத்தைப் பிளந்துகொண்டு பாம்புகளைச் சேர்த்துக்கொண்டு

7. மலையைப் பிளந்துகொண்டு மரங்களெல்லாம் பேர்த்துக்கொண்டு
செடிகொடியைப் பிடுங்கிக்கொண்டுதோழிமாரைக்கூட்டிக்கொண்டு

8. ஆப்தமான தோழிமார்கள் ஐந்துபேரைச் சேர்த்துக்கொண்டு
அமராவதி யென்னுமொரு அன்புடைய தோழியுடன்

9. பவானி யென்னுமொரு பிரசித்தமான தோழியுடன்
லக்ஷ்மணை நதியான லக்ஷணமாந் தோழியுடன்

10. ஹேமவதி யென்னுமொரு இஷ்டமான தோழியுடன்
காஞ்சனை நதியென்னுமொரு களிப்புடைய தோழியுடன்

11. தோழிமாரைக் காவேரியம்மன் துணையாகச் சேர்த்துக்கொண்டு
பரவியெங்கும் நிறைந்துகொண்டு பார்வையாக வந்துவிட்டாள்

12. ஒசந்துவரும் நுரையழகும் உத்ஸாக கொந்தளிப்பும்
பெருகியந்தக் காவேரிநதி அலைமோத வந்துவிட்டாள்
13. குயில்கூவி குதூகலிக்க குளிர்ந்தகாற்று வீசிவர
சோலை தூரத் தென்றல்வீச சிறந்தநதி யாகவந்தாள்
14. கனத்தசெடி குடிசைகளும் காட்டுமிருகம் பலவகையும்
வாழையுடன் கமுகுதென்னை வாரிக்கொண்டு வந்துவிட்டாள்
15. சாமுண்டி மலையருகின் ஸ்தலங்களெல்லாம் சுற்றிக்கொண்டு
மைசூரு ராஜ்ஜியத்தில் வைபோகமாய் நிறைந்துகொண்டு
16. சிவசமுத்திரந் தன்னில்வந்து சிலபிரிவாய்க் கீழிறங்கி
ஸ்ரீரங்கப் பட்டணத்தில் ரங்கருக்கு மாலையாகி
17. ஈரோடு கொடுமுடியின் எல்லைவழி யாகவந்து
அகண்டமென்னும் காவேரியாய் அழகுடனே பரவிவந்தாள்
18. ஜம்புநாதர் ஸ்ரீரங்கர்க்கு திருமாலை யாகவந்தாள்
பாற்கடல்போல் அலைமோத படுகையெங்கும் நிறைந்துவந்தாள்
19. வயல்களெல்லாம் நிரம்பிக்கொண்டு வேகமாக வந்துவிட்டாள்
அறம்வளர்த்தாள் படித்துறைக்கு ஐந்துமுகத் தோடுவந்தாள்
20. பஞ்சநத க்ஷேத்திரத்தில் காவேரியும் வந்தவுடன்
ஆள்கொண்ட சுவாமிசென்று அறம்வளர்த்தாளுக் கறிக்கையிட்டார்
21. அம்பிகையாள் தானெழுந்து ஆபரணஞ் சோதிவிட
பாக்குடனே வெற்றிலையும் பழத்துடனே தேங்காயும்
22. மஞ்சளுடன் குங்குமமும் மணமுடைய சந்தனமும்
புஷ்பவகை யுள்ளதெல்லாம் தட்டினிலே எடுத்துக்கொண்டு
23. காவேரியின் வரவேற்று காணிக்கையும் தான்கொடுத்தாள்
வாங்கிக்கொண்டு காவேரி வணங்கி நமஸ்கரித்தாள்
24. வாழ்த்தியப்போ அம்பிகையும் நதியைக்கண்டு மனமகிழ்ந்தாள்
சமுத்திரரை நானடைய சந்தோஷமா யனுப்புமென்று
25. காவேரி கேட்கலுமே கல்யாணிதேவி சொல்வள்
சமுத்திரரை இங்கழைப்பேன் சந்தோஷமா யிருப்பாயென்றாள்
26. காவேரி கேட்டுமதைக் கலங்கியவள் தன்மனதில்
சரீரமெல்லாம் அங்கேவைத்து சாக்ஷியாக ஒருரூபம்
27 சாக்ஷியான காவேரி சாகரத்தை நோக்கிச்சென்றாள்
அம்மனுட ஆக்ஞையினால் சமுத்திரரும் அக்ஷணமே
28. உத்ஸாகத் துடனேவந்தால் உலகமெல்லாம் முழுகுமென்று
பாதாளத்தில் மறைந்துகொண்டு பட்டணத்தின் நடுவேவந்தார்
29. ஸ்தலத்தினுட மகிமைதன்னை சமுத்திரருந் தான்பார்த்தார்
ஸப்தஸ்தல சுவாமிகளும் சமுத்திரரின் வரவேற்று

30. பழங்களுடன் தாம்பூலம் பிரஸாதங்களும் தான்கொடுத்தார்
வாங்கிக்கொண்டு சந்தோஷமாய் சமுத்திரரும் போய்மறைந்தார்
31. சாக்ஷியென்னும் காவேரிநதி சாகரத்தில் தேடிவிட்டு
திரும்பிவந்து காவேரி தயங்கி மனந்தளர்ந்து
32. சமுத்திரரை யடையவென்று தர்மாம்பாளை நினைந்து
கன்னிகையாய் திருவையாற்றில் காவேரி தவமிருந்தாள்
33. பார்வதியாள் காவேரியை பரிஹாஸம் பண்ணவென்று
அறம்வளர்த்தாள் குறவடிவை அழகாகத் தானடைந்தாள்

தர்மாம்பிகை குறத்தி வடிவெடுத்தல்.

(2-வது வேறுமெட்டு.)

1. பாடகந் தண்டையும் பாதஸரமும்
பத்துவிரலுக்குப் பீலிமெட்டியும்
அடுக்குமோதிரம் சங்குவளையும்
அஸ்தகடகமும் தோள்வளையும்
2. குண்டும் பவழம் குடமணித் தாழ்வடம்
கோத்தமுத்துடன் வஜ்ஜிரமாலையும்
சங்குமணியும் பச்சைமணியும்
சரப்பளி உத்தண்டா மோகனமாலையும்
3. கொப்புடன் நல்ல முத்துவாளியும்
குந்தள ஓலையும் கொடக்கடுக்கனும்
மின்னல் ஒளிபோல மூக்குத்தியும்
முத்துக்கட்டின வஜ்ஜிரக்கல்லும்
4. பல்லொளியும் புன் சிரிப்பும்
பவழம்போல சிவந்தவாயும்
கண் மலரும் மையழகும் இரு
கண்ணிடையில் பச்சிலைப்பொட்டும்
5. கஸ்தூரிப்பொட்டும் நெற்றியின் பட்டமும்
கல்லிழைத்த சுட்டியாழ்வானும்
மல்லிகை முல்லை மலர்கள்சூடி
மயிரைவாரி முடிந்த அழகும்
6. கறுப்பு ரவிக்கையும் பட்டுப்புடவையும்
கச்சிதமாகவே உடுத்தவழகும்
பாலகனை யார்புடனே
பூட்டுத் தலப்பாலே அரவணைத்து

7. குஞ்சுகளைக் குறத்தியம்மை
கூடத்தன்னுடன் கூட்டிக்கொண்டு
கொடிபோல இடையும் துவளக்
கூடையெடுத்து இடுப்பினில்வைத்து
8. பாக்குப்பையும் இடுப்பில் சொருகி
பாவனையாகவே சாய்ந்துநடந்தாள்
காதுவரையில் நீண்ட கண்ணும்
கனிவாயும் புன்சிரிப்பும்
9. செண்பகம் போல் மேனிவர்ணமும்
செந்தாமரை போல் முகமும்
தாழை மடல்போன்ற காதுகளும்
சந்திரன்போல் விளைந்த நெற்றியும்
10. பஞ்சநதி திருவை யாற்றின்
பெரியதொரு வீதியிலே
தையலந்த வண்ணக்குறத்தி
தானும்வந்தாள் குறிபார்க்க.

ஸ்திரீஜனங்கள் குறத்தியிடம் குறிகேட்குதல்

11. செம்பொன் கொடிபோல் மெல்லநடந்து
தெருவீதி சுற்றிவந்தாள்
தேர்முட்டியி னருகே நின்று
சிவதெரிசனம் பண்ணிக்கொண்டு
12. சிங்காரமாகவே வண்ணக் குறத்தி
தென்னண்டைவீதித் தெருவில் வந்தாள்
அம்பிகையென்னுங் குறத்தியிடத்தில்
ஆதரவாய் வந்து மாதரெல்லாரும்
13. கூட்டமாய்க் கூடியே கொம்பனைமாரெல்லாம்
குறத்தியைப்பார்த்து கேட்கத் துவக்கினோர்
பெண்க ளிரண்டுபேர் புத்திபறிய வில்லை
இங்கழைத்துவந்தேன் பாராய்குறத்தி
14. மூத்தபிள்ளைக்கு வேட்க வகையில்லை
சாஸ்திரம்பாரென்று சொன்னா ளொருத்தி
இளையபிள்ளையும் என்னுடன் பேச வில்லை
எனக்குச் சொல்லென்று கேட்டாளொருத்தி
15. கைக்குழந்தைக்கு காச்ச லடிக்குது
காட்டவந்தேனென்று சொன்னாளொருத்தி

நாத்தனுருக்கு ஆக்துப் புருஷன்
நலமில்லையென்று கேட்டாளொருத்தி
16. கொழுந்தனொருத்தன் கூத்தியார் வீட்டிலே
குடியாய்க்கிடக்கிறான் என்றாளொருத்தி
தோழியொருத்தி தூர்க்கனு காண்கிறாள்
திருநீறுதாவென்று கேட்டாளொருத்தி
17. மாமனுருக்கு மண்டை யிடிக்குது
மாத்திரைதாவென்று கேட்டாளொருத்தி
நாட்டுப்பெண்ணுக்கு பேய்பிடித் தாட்டுது
நல்லமருந்துதா வென்றாளொருத்தி
18. இப்படிப்பெண்டுகள் எல்லாருங் கேட்கவே
இங்கிதமாகக் குறிகளுஞ்சொல்லி
கைலாஸநாதனை ஆலயஞ் சென்று
கண்டுபின் வந்து குறிகளுஞ் சொல்வேன்
19. என்று சொல்லியந்தப் பெண்டுக ளுடனே
ஈச்வரியாகிய வண்ணக்குறத்தி
அம்பிகையென்னும் வண்ணக் குறத்தி
ஆள்கொண்டார்கோவிலைக் கண்டுதொழுது
20. ஆள்கொண்ட சுவாமியின் கோவிலைவிட்டு
அய்யாரப்பரின் சந்நிதிவந்தாள்
சூர்யபுஷ்கரணி ஜலத்தை யெடுத்து
விரலின்மேலே தெளித்துக்கொண்டாள்
21. தென்கைலாஸம் வடகைலாஸம்
சுற்றிபிரதக்ஷணம் பண்ணிவந்தாள்
சுவாமியுடைய சந்நதித்தூணில்
சாய்ந்திருந்தாள் வண்ணக்குறத்தி
22. சந்நதியிலே யிருந்த குறத்தி
வடிவைக்கண்டு சங்கரரும்
கயல்மீன்போன்ற கண்ணழகும்
கஸ்தூரிப்பொட்டும் முகஒளியும்
23. புன்சிரிப்பும் பல்லொளியும்
புவனேச்வரி வடிவழகும்
ராஜேச்வரி அழகைக் கண்டு
நாலுநாழி பிரமித்திருந்தார்
24. இந்நெடு நாளிதுவரைக்கும்
இந்தவடிவை நாம்கண்டதில்லை

மன்மதனை யெரித்தசிவன்
மயங்கியே தன்மனதிற் குள்ளே
25. காமனைநீறு யெரித்த சிவன்
கலங்கியேதன் மனதிற்குள்ளே
அந்தக்குறத்தி வடிவைக்கண்டு
ஆசையுடன் மோகங்கொண்டார்.

பஞ்சநதீசர் சுந்தரவடிவுடன் குறத்தியிடம் வந்துசம்பாஷித்தல்.

(3-வது வேறு மெட்டு.)

1. கைவளையும் சங்கிலியும் கணையாழி மோதிரமும் (சுவாமி)
கடுக்கனுடன் பதக்கம்கண்டி சரப்பளியும் தரித்தார்
2. சாயக்கம்பி வேஷ்டிகட்டி சரிகைச்சால்வை யணிந்து
தலைப்பாகையும் உருமாலை சங்கரரு மணிந்தார்
3. சந்தனக் குறுக்குமிட்டு ஜவ்வாதுப் பொட்டிட்டு
தங்கரைஞாண் தாழித்தும் கந்தம் புனுகணிந்தார்
4. கொழுந்து வெட்டிவேர் மல்லிகை குடமல்லிகைப் புஷ்பம்
குமுகுமுன்னு பரிமளிக்க குடுமியிலே அணிந்தார்
5. வாயிலே பாக்கடக்கி வெண்பட்டுப் பைபிடித்து
மடித்ததொரு வெற்றிலையை விரல்நடுவி லிடுக்கி
6. கந்தர்வ வேஷத்துடன் குறத்தியிடம் வரவே (சுவாமி)
கூர்விழியால் மயக்கியந்தக் குறத்திமெள்ளச் சிரித்தாள்
7. ஈச்வரரைக் கண்டவுடன் எழுந்திருந்து குறத்தி (அம்மை)
இருகையினா லுங்கூப்பி அடிவணங்கி நின்றாள்
8. வாரும்பெண்ணே குறத்தியேயுன் வடிவைக்கண்டு வந்தேன்
மாலையிட்ட உன்கணவன் வந்தானோ கூட
9. தாய்தகப்பன் உனக்குமுண்டோ சகோதரர்கள் உண்டோ
ஜாதிகுலம் நாமந்தன்னை தனித்தனியாய் சொல்வாய்
10. எந்தநாடு எந்ததேசம் எங்கேவந்தாய் குறத்தி
இந்நெடுநாள் உன்போல்வடிவைக் கண்டது நானில்லை
11. சித்திரைத் திருநாளுக்கு ஜனங்கள்மெத்த வருவார்
சுந்தரிஉன் வடிவைப்போல கண்டது நானில்லை
12. வைகாசி வஸந்தனுக்கு மனுஷ்யாள் இங்கு வருவார்
வையகத்தில் உன்னைப்போன்ற வடிவைக்கண்ட தில்லை
13. செல்லத்துடன் சிவனாரும் சுந்தரியைக் கேட்க
வண்ணக் குறத்திகேட்டு மயக்கியவ ளுரைப்பள்
14. ஜாதிகுலங் கேட்டீரே சுவாமியென்னை யிப்போ—நான்
தனித்தனியா யெடுத்துச்சொல்வேன் சலியாமல் கேளும்

15. ஜாதியும்நான் குறச்சாதி தனிவழியும் வருவோம்—நாங்கள்
சாம்பபர மேசருக்கும் சம்பந்தங்க ளுண்டு
16. அப்பன் ஆயி என்னை அம்பிகையென் றழைப்பார்
என், அண்ணன்பெயர் சக்ரபாணி ஆறுமுகனென் பிள்ளை
17. குச்சுக்கு காவலாயென் கிழவனும் இருப்பார்
கூடைமுறங் கட்டிநாங்கள் குறிபார்த்துச் சொல்வோம்
18. குஞ்சுகளின் பசியார அன்னமது கொடுத்து
கொழித்தமுத்தும் முறந்தில்வைத்தால் குறிபார்த்துச் சொல்வேன்
19. வண்ணக் குறத்தியிந்த வக்கணைகள் படிக்க
கேட்டுமந்தப் பரமேசருங் கெம்பீரமாய்ச் சொல்வர்
20. பட்டுச்சீலை படியரிசி பாக்குடன் வெற்றிலையும்
பசியடங்கப் பட்டைசாதம் பணமுங்காசுந் தருவேன்
21. உன்கணவன் கிழவனென்று சொன்னாயே நீ பெண்ணே
கந்தருவன் போன்றநானே உன்னழகுக் கேர்வை
22. செல்லத்துடன் சிவனும் சிரித்துக்கொண்டே சொல்ல
வண்ணக்குறத்தி சினந்து மறுத்திதனைச் சொல்வன்
23. என்கணவன் குறவனெங்கள் கிழவனிதைக் கேட்டால்
ஈட்டியினாலே குத்தி என்னை இழுத்தெறிவார்
24 ஆசைபெரி தென்றுசொல்லி உம்மைநானு மடைந்தால்
அறம்வளர்த்த நாயகியும் அக்கினியால் தகிப்பள்
25. வேலைசெய்யத் தாதியுண்டு பாக்கியமெனக் குண்டு
விதம்விதமாய் பட்டுமுண்டு வெகுபணதி யுண்டு
26. கட்டிலுண்டு மெத்தையுண்டு கிழவனரு கிருப்பேன்
களஞ்சியத்தில் அரிசியுண்டு கவலைகெட யிருப்பேன்.

குறத்தி ஈசருக்கு தன் பெருமையுரைத்தல்

(2-வது மெட்டுப்போல் பாடலாம்.)

1. கோத்தமுத்து மாலையுடன் கொப்புடனே வாளிமின்ன
ஏற்றமுள்ள ஈச்வரியாள் எடுத்துச்சொல்வள் தன் பெருமை
2. பூத்திருக்கும் சோலைகளும் புஷ்கரணி தீர்த்தங்களும்
காஞ்சனத்தால் ஆலயமும் கடைத்தெருவும் வீதிகளும்
3. பார்வையுள்ள வீதிகளும் படித்துறையுங் காவேரியும்
ஏழுநிலைக் கோபுரமும் எட்டவொண்ணாத் திருமதிலும்
4. பத்துநிலைக் கோபுரமும் என் பள்ளியறை சேர்வைகளும்
யாகம்வேள்வி செய்யும் நல்ல அந்தணர்கள் கூட்டங்களும்

5. வேத பாராயணத்தமுகும் நான் வீதிவரும் வைபோகமும்
பஞ்சநதி மகத்துவமும் எந்தன் பரிபூர்ண நதியழகும்
6. இன்னமுண்டு என்பெருமை ஜகதீசனே நீர் கேளுமென்று
தையலாந்த உமையவளும் தன்பெருமை பின்னுஞ்சொல்வள்

துறந்தி ஈசருக்கு மலைவளமை யுரைத்தல்.

(2-வது மெட்டுப்போல் பாடலாம்.)

1. கைலாஸத்தினில் வஸிப்பவரே காளவிஷத்தை புஜித்தவரே
எந்தனுட மலைகள்தன்னை ஈச்வரரே நீர்கேளும்
2. கொங்குகுடகு கொல்லிமலை வங்கம் மலையாளதேசம்
கஞ்சிகாள ஹஸ்தியுடன் காசியிலும் நானிருப்பேன்
3. அங்குமிருப்பேன் சுவாமிமலையில் அடர்ந்தசோலைக் குடந்தையிலும்
இங்குமிருப்பேன் பஞ்சநதியிலும் ஏழூரும் சுற்றிவருவேன்
4. வைத்தீச்வரன் கோவிலிலும் மனமகிழ்ந்துநான் வஸித்திடுவேன்
அறம்வளர்த்தாள் சந்நதியில் அனுதினமும் நானிருப்பேன்
5. சங்கமுகம் மாயவரமும் சபாநாதரைக் கண்டுவருவேன்
மங்கள நாயகரே மஹானுபாவா நாடுகேளும்.

துறந்தி ஈசருக்கு நாட்டுவளமுறைத்தல்.

(3-வது மெட்டுப்போல் பாடலாம்.)

1. எந்தனுட நாடுதன்னை கேளுமையா சுவாமி
ஏற்றமுள்ள ஈச்வரனுர் வாழுமெங்கள் நாடு
2 பொங்கிப் புகழ்காவேரி உள்ள தெங்கள் நாடு
புண்ணியமாம் மானிடர்கள் புகழ்ந்தேற்றும் நாடு
3 சந்திரரும் சூரியரும் வஸிப்பதெங்கள் நாடு
சாரங்கபாணியனுர் பள்ளிகொண்ட நாடு
4 அஹிலாண்ட ஈச்வரியாள் வாழுமெந்தன் நாடு
அப்பருக்கு அருள்புரிந்த நாடு மெந்தன்நாடு
5 அஞ்சுநதியோடிவரும் பஞ்சநதம் நாடு
அன்னைபரமேஸ்வரியாள் அறம் வளர்த்தாள் நாடு
6 மாதூர் பூதேச்வரனுர் மலையுமெந்தன் நாடு
மலையின்மேலேவாழும் மகனுமுண்டு எனக்கு
7. ஜம்புநாதஸ்வாமி தீர்த்தமெந்தன் நாடு
ஸ்வயம்புவன பிக்ஷாண்டார் கோவிலுமென் நாடு
8. குத்தாலம் பாபவிநாசம் கோவில்மலை நாடு
முத்தான திரு அனந்தர் நாடுமெந்தன் நாடு

9 திருச்செந்தில் திருக்குன்றம் திருத்தணியும் நாடு
திருப்பதியென்னும் அந்தத்திருமலை என்நாடு
10. வண்ணக்குறத்தியும் தன் பெருமையை வர்ணிக்க
கூட்டங்கூடி தேவரெல்லாம் சுவாமியுடன் கேட்க
11, சரஸ்வதியும் லக்ஷ்மியும் சந்தோஷமாய்க் கேட்டு
குறத்தியுடமகிமை தன்னைக்காவேரிக்குச் சொன்னார்
12. காவேரியுங்கேட்டவுடன் தன் கவலை நீங்கி
சகியைவிட்டுக்குறத்தி தன்னை அழைத்துவரச்சொன்னாள்.

குறத்தி காவேரிக்குக் குறிசொல்ல வருதல்

(2 வது மெட்டுப்போல் பாடலாம்.)

1. (அடி) கொங்கையழகி குறத்தியம்மே நீ
குறிசொல்லுகின்ற மகத்துவத்தை
2. எங்கள் நாயகி காவேரிகேட்டு
அழைக்கச்சொன்னாள் குறத்தியேயுன்னை
3. செம்பொன் கொடிபோல் குறத்தியெழுந்து
திருக்காவேரிக்கரையில் வந்தாள்
4. வீற்றிருந்து தவம் செய்யுமந்த
மெல்லி நல்லாள் காவேரியம்மனும்
5. கண்டவுடன் குறத்திவரவைக்
காவேரியம்மனுங் கண்ணைவிழித்து
6. கயல்மீன்போன்ற கண்மலரும்
கஸ்தூரிப்பொட்டும் முகவொளியும்
7. நகைத்திடுமந்தப் பல்லொளியும்
ராஜேச்வரியின் வடிவழகும்
8, கண்டவுடனே குறத்திவடிவை
காவேரியம்மனும் மனந்திகைத்து
9. (அடி) ஸஹ்யமலைக்கும் சமுத்திரத்துக்கும்
சாய்ந்தவண்ணமாய் நானிருப்பேன்
10. இந்நெடு நாளாய்க் கண்டதில்லை
உந்தன்வடிவைப்போல குறத்தி
11. எந்த நாடடி குறத்தியுனக்கு
எனக்குச்சொல்வாய் எமக்குறத்தி
12, என்றவுடன் மந்தஹாஸமாய்
உமையுமப்போ எடுத்துரைப்பள்

13. இந்தநாடெல்லாம் எந்தன் நாடுதான்
இன்னமுண்டெந்தன் நாடுகளும்
14, பொங்கித்தளும்பும் நாலுகடலும்
புவனேந்திரக் குறவருடன்
15. அங்கங்கிருந்து நான்வவிப்பேன்
அய்யா றப்பன் குறத்தியென்பேர்

குறத்தி காவேரிக்குக் குறிசொல்லுதல்

(3-வது மெட்டுப்போல் பாடலாம்.)

1. எந்தனுடநாடுகளும் சொல்லித்தொலையாது
ஏற்றமுள்ள ஈச்வரனார் ஆள்வதெங்கள் நாடு
2, சொல்லுவேண்டி உன் குறையை தயவெனக்குண்டாக
சொர்ணங்களைங்கொணர்ந்து வைத்தால் தகுந்த குறிசொல்வேன்
3. கீர்த்தியான முத்து ரத்னம் பவழங்களுங்கொணர்ந்தால்
(உன்) நெஞ்சிலுள்ள குறைகளை நான் நிவர்த்தியாகச்சொல்வேன்
4. வஜ்ஜிரமும் பச்சையுடன் வைரேயமுங் கொணர்ந்தால்
(உன்) மனதிலுள்ள குறையை நானும் மாற்றும்படிசொல்வேன்
5. சந்நியாசி வேஷங்கொண்ட தபஸியுந்தன் கணவன்
தலைமயிரை ஜடைதரித்து தபஸுபண்ணும் முனிவன்
6. கௌபீனம் ருத்ராக்ஷம் கமண்டலமும் தரித்த
அமைந்த கிருஷ்ணாஜினந்தரித்த அகஸ்தியருமவரே
7. அகஸ்தியரை மாலையிட்டு லோபாமுத்திரை நீயும்
அகண்டகாவேரியாகி அவரைவிட்டுப்பிரிந்தாய்
8. சமுத்திர ராஜனுடன் சங்க முகமாகி
சமுத்திரத்தைப்போயடைய தபஸுபண்ணியிருக்காய்
9. மார்கழி மாதத்தினில் மணல் மேடு இடுவாய்
மடுக்களிலும் ஜலம் வற்றி வெகு நாற்றம் நாறும்
10. ஆற்றின் ஜலம் வற்றிவிட அனைவர்களுந்தவித்து
ஊற்றின் ஜலந்தனையெடுத்து உலகிலுள்ளோர் உழல்வார்
11. வைகாசி வஸந்தகாலம் வருவாய் வெள்ளம் பெருகி
வையகத்துமனிதரெல்லாம் முழுகிக்களிபெறுவார்
12. ஆடிமாதம் பெருக்கெடுத்து அணைகரையில் போட்டால்
அப்போநீயும் சமுத்திரனை அடைந்துமனமகிழ்வாய்
13 கொஞ்சுங்கிளிபோல் குறத்தி குறிகள் சொல்லிச்சிரிக்க
கூட்டிக்கடி சகலரும்கூடி நின்று கேட்டார்

குறத்திஈசருடன் சம்பாஷித்தல்

(4-வது வேறுமெட்டு)

1. குறத்தி முகத்தையும் குறிசொல்லும் நேர்த்தியும்
 குறிப்புடனே பார்த்து
2. க்ஷணப்பொழுதாகிலும் கண்ணைமூடாமல்
 சங்கரர் பார்த்திருந்தார்
2. (அடி) கொங்கையழகி குறப்பெண்ணே நீயும்
 குறிசொன்னது போதும்
 என் ஆலயம் புகுந்து அன்னம் புஜித்து
 அணையாய் நீ என்னையென்றார்
3, சிறுபிள்ளைப் புத்திபோல் சிவனுமுரைக்கவே
 சிவகாமி தான் கேட்டு
 சித்தத்திற்குள்ளே சிரித்து மகிழ்ந்து
 சீறியே ஏதுசொல்வள்
4, பஞ்சாப கேசரின் பாததெரிசனம்
 பண்ணவே நானும் வந்தேன்
 ஆசைபெரிதென்று உம்மையும் நானும்
 அணையவும் நீதியுண்டோ
5. அறம்வளர்த்த உம்மநாயகியாளுமக்
 கனுக்ஞை கொடுத்தாளோ
 ஆகட்டுமிப்போ தவளுடன் சொல்லியே
 ஆக்கினை பண்ணிவைப்பேன்

ஈசர் அம்பிகையைக் காணமல்வருந்துதல்.

6. சிரித்தமுகத்தையும் துடுக்கானவார்த்தையும்
 சிவசங்கரர்தான் கேட்டு
 (நம்ம) சுந்தரிதேவியும் வந்தாளோ வென்றவர்
 சுற்று முற்றும் பார்த்தார்
7. சரஸ்வதி லக்ஷ்மி இருவருமாகச்
 சரேலென் றெழுந்திருந்து
 சங்கரியாளை அழைத்திடாமும்
 அறிவழிந்துபோனோம்
8. ஆலயத்திற்சென்று அம்பிகையைத்தேடி
 ஆராய்ந்து பார்த்துமவள்
 மூலைமுடுக்கெல்லாம் தேடிக்காணமல்
 விசாரமுங் காணடைந்தார்

9. சிவசுந்தரியாளைக் காணுமலேயந்தச்
சங்கரர் தான்புலம்பி
நந்திகேசரைவிட்டு எங்குந்தேடச்சொல்லி
(சிவ) நாதன் தவித்தழுதார்

10. சித்திவிநாயகா சங்கரியாளைக்
காணேமே என்னசெய்வேன்
சுந்தரிதேவியைக் காணவிட்டல் நான்
சீவனிழப்பேன் என்ருர்

11. சிவசுப்ரமண்யா உன்னுட அன்னையைக்
காணேமே என்ன செய்வேன்
அம்பிகையாளை நான் கண்ணிற் காணவிட்டால்
ஆவி யிழந்திடுவேன்

12. கௌரீவல்லபர் என்று பிரபஞ்சத்தில்
கீர்த்தியாய் சொல்லுவர்
வாமபாகத்தினில் தேவியில்லாவிட்டால்
வாசுன மேறுவரோ

13. பார்வதி சங்கரர் என்று பிரபஞ்சத்தில்
பக்தியாய்ச் சொல்லுவர்கள்
பத்னியுமில்லாட்டால் பத்னிஹீனனுக்கு
பூஜையும் பண்ணுவாரோ

14. அம்பிகையாள் வந்து சேராவிட்டாலெனக்
கன்னபானங்கள் வேண்டாம்
அபிஷேகம் வேண்டாம் அலங்காரம் வேண்டாம்
அர்ச்சனையும் வேண்டாம்

15 சுந்தரி சுந்தரி என்று எல்லோருமாய்
சேர்ந்து அலத்தலுற்ருர்
சிவகாம சுந்தரிதேவியுங்கேட்டு
சிரிததாள் மனதிற்குள்ளே

16. சபையிலுள்ள பேரைக் கடைக்கண்ணுலேபார்த்துச்
சங்கரி தானிருக்க
சரஸ்வதி லக்ஷ்மி குறத்தியுடைய
சமீபத்திலோடி வந்து

17. சங்கரியாளைக் குறத்தியே நீயும்
க்ஷணத்திலழைத்தாயானல்
செம்பொன்னும் முத்தும் ரத்தினங்களெல்லாம்
சொர்ணத்தட்டிற் கொடுப்போம்

18. அம்பிகையாளை அழைப்பித்தாலிக்ஷணம
யானை சேனை குதிரை
வெண்கலத்தேருடன் தங்கப்பல்லாக்கும்
வெகுமானந் தாரோமென்றார்

19. சேனைபரிவாரம் யானைகளுண்டென்று
துடுக்காகப்பேசுகின்றீர்
(என்) சித்தத்தினிலிப்போ கோபம் வந்துதானால்
தகித்துவிடுவேன் நானும்

20.. சினத்துடனேயந்தக் குறத்தியுரைத்திட
சரஸ்வதி லக்ஷ்மியும்
குறத்தி யைநாமும் அதட்டிப்பேசினது
குற்றமாய் நேர்ந்ததிப்போ

21, குறத்திக்கு கோபம் வந்துவிட்டதானால்
குத்திவிடுவள் நம்மை
குறவரெல்லாருமாய் கூட்டமாய்க்கூடி
கொன்று விடுவார் நம்மை

22. என்று சொல்லிக்கொண்டு தேவியைக் காணமல்
ஏக்கமடைந்திருந்தார்
தய்யல் குறத்தி சரஸ்வதியை நோக்கி
சாந்தமாய் தானுரைப்பாள்.

அம்பிகை தன்னை அறிவித்து ஈசருடன் ஆலயம் சேர்தல்

23. சபையுள்ளோர் ஏக்கமும் சங்கரர் வாட்டமும்
சங்கரி கண்டிரங்கி
சந்தோஷமாகச் சபையோர்களைப்பார்த்து
தயவாகத் தானுரைப்பாள்

24. கோடிநவரத்தினம் கொண்டுவந்தாலிப்போ
குறிபார்த்து நானுமுங்கள்
அம்பிகையாளை அரைநாழிக்குள்ளாக
அழைப்பித்துத் தாரேனென்றாள்

25. முப்பத்து முக்கோடி தேவர் ரிஷிகளும்
முன்னை நிறைந்திருக்க

அவர் கரத்தைப் பிடித்தாள்

26: தய்யல் குறத்தியும் கையைப்பிடிக்கவே
சங்கரர் தான்பயந்து

நெஞ்சந்துடிக்க சரீரம் பறக்கத்
திடுக்கிட்டுத்தான் திகைத்தார்

27. குறத்தியைக்கண்டாசைப்பட்ட சிவனுமே
கூசாமல் கைகாட்டும்
வெட்டவெளியான பிரம்மம் உமக்கிந்த
வெட்கமுந்தானுமுண்டோ

28. விழுந்து எழிவீர் எடுத்து உடுப்பீர்
வித்தைகள் செய்திடுவீர்
சதாசிவப்பிரும்மம் நானென்று சொல்வீர்
சந்யாசிபோலிருப்பீர்

29. பதிவிரதைமார்களைப் பங்கம் குலைப்பீர்
பரப்பிரம மூர்த்தி என்பீர்
ரிஷிபத்தினிமாரண்டை நிர்வாணத்துடனே
நின்றது வெட்க மன்றோ

30. அறிவிலியாகிய அஸுரா துராத்மாவுக்கு
அவன் கேட்ட வரங்கொடுத்து
அண்டம் பதினாலும் ஒடியலைந்து நீர்
ஐவேலிக்காயி லொளிந்தீர்

31. மூர்த்தியில் சமர்த்தராம் விஷ்ணுவும்போது
மோஹினி வேஷங்கொண்டு
அஸுரனைக் கபடத்தால் வதைசெய்த விஷ்ணுவை
அணைந்தது வெட்கமன்றோ

32. வண்ணக்குறத்தி பரிஹாஸம் பண்ணவே
மஹாதேவர் தான் கேட்டு
குறத்தியைக் கண்டு நாமிச்சையடைந்தது
குற்றந் தானென்றுணர்ந்தார்

33. சுவாமி தளர்ந்திடும் மேனியும் சங்கரர்
வாட்டமும் சங்கரிகண்டிரங்கி
க்ஷமிக்க வேணுமென்று சங்கரர் பாதத்தில்
சரணமென்றே பணிந்தாள்

34. தய்யல் குறத்தி பணிந்தவுடனே
சபையோர்கள் தான்பார்த்து
அம்பிகை தானிவள் என்றறிந்தவுடன்
ஆனந்த மாயிருந்தார்

35. ஆதி சிவனும் அம்பிகை யுடனே
ஆலயந் தன்னிற் சென்று

குறத்தி வடிவான அம்பிகையாளைக்
கூசாமலே யணைந்தார்

36. அம்பிகையுடனே அபிஷேக மாடி
அமுதமுந் தான் புஜித்து
வாமபாகத்தினில்தேவியுடன் சிவன்
மந்தஹாஸமாய் வீற்றிருந்தார்

37. பக்தியாய் சொன்னவர் சிரத்தையாய்க்கேட்டவர்
கற்றுக்கொடுத்தவர்க்கும்
அஷ்டபோகத்துடன் புத்திரபாக்கியமும்
அறம்வளர்த்தாள் கொடுப்பள்

38. அறம் வளர்த்தபர தேவியின் பாதத்தை
அனுதினமும் ஸ்மரித்தால்
அம்பிகை யின்திருப் பாதார விந்த
ஐக்கியமுந் தான் கொடுப்பள்

39. அம்பிகை யருளால் காவேரி பெருகி
ஆற்றினில் வெள்ளம் வந்து
சந்தோஷ மாகிச் சமுத்திரத் தைக்கண்டு
சங்க முகமடைந்தாள்

40. மங்களம் மங்களம் தர்மாம்பிகையு டனே
பஞ்சநதீச்வரர்க்கும்
மங்களம் திருக் காவேரி நதிக்கும்
மண்ணில் வாழும் மாந்தருக்கும்

காவேரியம்மன் கப்பல்.

(விநாயகர் துதி கப்பல்)

நமோமஹா கணபதியே-சம்போ-நமோமஹா குணநிதே
நமோஉமா ஸ்கந்தாய-சம்போ-நமோஹரன் ஆநந்தாய

(முடுகு.)

விக்நராஜாய வெகு விக்நஹரணாய
லம்போதராய ஹேரம்பாய மஹாதே
ரம்பாபலகராய அம்பா ஸுதாய
அபயவர கரதாய ஏகதந்தாய
சுபமுக வரதாய லம்போதராய
கபிலமுக வர்ணாய கஜகர்ணிகாய

விகடதந்தாய ஸுர கணபூஜிதாய
தூமகேதாய யக்ஷ கணஸேவிதாய
பாலசந்திராய ஹரஸ்கந்தஜேஷ்டாய
சரவண பவாயநம: கருணாரஸாய.

ஏலேலோ கணராஜா—ஐயா
ஏலேலோ சர்வேசா.

மண்டலமெல் லாம்புகழும்—பொன்னி
மங்களக் காவேரி கப்பல்
தென்கிழக்காய் காவேரி—அம்மன்
செல்லுகின்ற ஸ்தலங்கள் சொல்வாம்.

(முகு.)

விண்ணவர்கள் புகழும் ஸஹ்யகிரி தனைவிடுத்து
மின்னொத்த குடகுகிரி காட்டின் வழிவந்து
உன்னத கிரிகடந்து கண்காணும லோடி
தென்னலுடன் சிவசமுத்திர சிகரம்விட்டு இழிந்து
சேர்ந்துவந்த கபிலையுடன் சந்தோஷமாய்ச் சேர்ந்து
திருமுக்கூடென்னுமந்தத் திருநகரைத் தாண்டி
ஸ்ரீரங்க பட்டணத்தில் சடுதியாக வந்து
ஸ்ரீரங்க நாதருக்குத் திருமாலையாய் விளந்து
சீருடைய கௌமுகியும் சேலம்நகர் சேர்ந்து
க்ஷேத்திரமாம் பிர்மகிரி சேர்வைமலை தாண்டி
அந்தமாய் பவானிநதி அன்புடனே கூட
ஆனைக்குந்தி மலையைவிட்டு அமராவதி சேர
சொந்தமாய் ஈரோடுவிட்டு கொடிமுடியைச் சேர்ந்து
திருமூர்த்திகள் வஸிக்குமந்த ஸ்தலத்தைக்கண்டு மகிழ்ந்து
அந்தமுள்ள சோனுட அரசாட்சியில் அமைந்த
அழகான ஊர்களெல்லாம் அன்புடனே பாவி
பாச்சலூர் கருவூரு குழித்தலையும் பார்த்து
பெருகமணி சிருகமணி (திருப்) பளாத்துறையு மோடி
அகண்டகா வேரியாகி அடியார்களைக் காத்து
தலைமகளாய் கொள்ளிடத்தை வடபுரத்தில் செலுத்தி.
திருச்சினப் பள்ளிமலை ஈசனையும் ஸ்துதித்து
ஜம்புநாதர் ஸ்ரீரங்கர்க்கு திருமாலையுந் தரித்து
சிந்தாமணி தன்னைவிட்டுத் திருவானைக்கா கடந்து
கொண்டல்கண்டு மயிலாடும் கோவிலடி யடைந்து

கொக்கரசம் பேட்டைதிரு மழப்பாடி கடந்து
வண்டிலுடன் பெருகிமக ராஜபுரம் வந்து
தில்லைஸ்தானம் திருக்கண்டியூர் திருவையாற்றில் தங்கி
கணபதிஅக் கிரகாரம் கபிஸ்தலமுங் கண்டு
வளமையான சுவாமிமலை கும்பகோணம் வந்து
பேரான மருதூரின் பரமரையும் பணிந்து
பேர்பெற்றகோ விந்தபுரம் வஞ்சிநாடு புகுந்து
குத்தாலம் ஆடுதுறை உச்சிதமாய் கடந்து
கோனேரி ராஜபுரம்நர சிங்கன்பேட்டை வந்து
கௌரீமா யூரநாதன் சந்நிதியைக் கண்டு
களிப்புடன் துலாமாதக் கடசீமட்டு மிருந்து
கண்டவுடன் ஜீவர்களின் கர்மங்களை யொழித்து
அன்புடனே கௌரிநாதன் அனுக்கிரக மடைந்து
சந்தோஷமாய் காவேரி சாயாவனந் தாண்டி
சங்கமுகத் துறையடைந்து சமுத்திரனைச் சேர்ந்தாள்,—

அன்புடனே கூடி — அலையுடன் போராடி
கண்கலங்கி வாடி — கணவரிடம் ஓடி
களிக்கக் கடல் — கொந்தளிக்க
முத்தைக் கொழிக்க—தண்ணீர் சிவக்க—சேர்ந்து
காதலுடன் — கடல்மன்னனும்
காவேரியுங் — கலந்துவிட
ஏலேலோ—ஏலேலோ—காவேரி
கடலுடனே கலந்த கப்பல்

காவேரியம்மன் ஊஞ்சல்.

இருபுறமும் சோலைதன்னில் குயில்கள் கூவ
எத்திசையும் பக்ஷியினம் இசைந்து பாட
தோழியராம் நதிகூடத் தென்றல் வீச
திருக்காவேரி கணவருடன் ஆடிஊஞ்சல்

ஓம்கூபம்.

பராதேவிதுணை

வேதாந்தக்குறம்

சற்குருவின் வணக்கம்.

(விருத்தம்)

1. அகண்டராய் நிர்க்குண ஸ்வரூபராய் இருக்குமரிதாக
அவனியிலே வந்து அவதரித்த மூர்த்தியுமாய்
ஸ்ரீவெங்கடேசரென்னும் நாமமுள்ள சற்குருவின்
திருவடிகள் தன்னில் ஸ்திரமாய் நமஸ்கரித்தேன்

2. ஒரு சிற்றெறும்புவந்து கடலின் ஜலத்தையெல்லாம்
பற்றவே நான்குடிப்பேன் என்னுங்கதைபோல
நித்தியதத்வஸாகரத்தை நீந்திக்கரைகாண
(என்) அற்பபுத்தியாலே அறிந்திடவுங்கூடாது

3. ஆனாலும் எந்தனுட ஆசை பெரிதாலே
தத்துவசாஸ்திரத்தை சங்கிரகமாய் எடுத்துச்
சொல்லவே நான் துணிந்தேன் சித்த சுத்த ஞானியர்கள்
தாமும்பிழைபொருக்க வேணுமென்றுதாள் பணிந்தேன்.

விநாயகர் துதி

1. தத்வரஸக்குறம்பாட சங்கரிகுமாரா
தரணிதன்னிலவினை வருக்கும்தடை தீர்க்கும்வீரா

2. விக்னமற்றுப் பரிபூர்ணமாக வரந்தந்து
விக்நேச்வரா எனக்கு முன்னடக்கவேணும்

சரஸ்வதிதுதி.

3. விமலையாய் பிரம்மாவின் நாவினுள்ளே வஸிக்கும்
வித்யாலக்ஷ்மி எனக்கு வரமளிக்கவேணும்

4. அமரரெல்லாம் அனுதினமும் அடிவணங்கும்தாயே
(என்) அக்யானமனதினுக்கு அறிவுவரவேணும்

பரமாத்மா குறத்தி வடிவெடுத்து புத்தி என்பவளுக்கு குறி சொல்ல வருதல்

(விருத்தம்)

4. பிரும்மபுறந் தன்னிலிருந்து போதவடிவாய்க் குறத்தி
கர்மசெடிகளென்னுங் காடெல்லாந்தான் கடந்து
வர்ம மற்றமனதுடையாள் வாக்கிய முந்தப்பறியாள்
நிர்மலமாம் புத்தியென்னும் பெண்ணருகில் வந்தாளே.

(கண்ணிகள்.)

1. போதமென்னுங் குறமகள்வரவே
சீதளமான சந்திரனைப்போல முகஒளியும்
பாதமுதல் தொட்டுசிரஸறுதி
நாலுசாதனங்களாகுந் தங்கப்பணதிகளசைய

2. இடைதன்னில் உடைவஸ்திரமிலங்க
(சாம) வேதவாக்கியமாகின்ற விபூதியிட்டுத்துலங்க
பக்தியாம் ருத்ராக்ஷமாலை தரித்து
பரிபூர்ணமாம் பிரும்மவித்தை குறந்தன்னைப்படித்து

3. பிரும்ம மயமென்னுங் குறக்கூடையும்
பெரியோர்கள் சேவைநாடுமந்த ஒய்யார நடையும்
வாழைமரம்போல இருதுடையும்
(அதி) சூக்ஷ்மமாய் பிடிக்கடங்கும் சொகுசான இடையும்

4. அனுபோகமென்ற பிள்ளை இடுக்கி
அபரோக்ஷ சாக்ஷாத்காரமென்னுங் கோல்பிடித்து மயக்கி
இத்தனை சம்பிரமத்துடன் குறத்தி
(சாக்ஷி) விருத்தியாகின்ற வீதியினில் வந்து மந்தபுத்தி

5. அகத்தின் வாசற்படியில் வந்து நின்றாள்
கண்டவுடனே புத்தியெதிர்கொண்டு வந்தாள்
விந்தையான குறத்தியைக்கண்டு
அந்தமான புத்திமிக்க ஆனந்த மடைந்தாள்

(விருத்தம்.)

5. வந்துநின்றகுறமகளைக்கண்டு மந்தமதியழகி
பந்தடித்துவிட்டாற்போல் பரபரவென்று ஓடிவந்து
(உன்) சுந்தரமாம் முகவடிவை இவ்வுலகில் கண்டதில்லை
எந்தநாடுந்தனுக்கு எனக்கறியச்சொல்வாயே,

துறத்தி புத்தி யென்பவளுக்கு தன் நாட்டு வளமை யுரைத்தல்

(3-கண்ணிகள்)

1. அத்வைதமான நாடெங்கள் நாடு
அசத்தமில்லாத நாடெங்கள் நாடு
த்வைத உபாதிகள் சற்றுமற்றதோர்
சீலஞானிகள் வாழு மென்நாடு

2. மானமில்லாத நாடெங்கள் நாடு
மனதுக்கெட்டாத நாடெங்கள் நாடு
தியானஞ் செய்திடும் நாடெங்கள் நாடு
சகல பாக்கியம் விருத்திக்கும் நாடு

3. இச்சையில்லாத நாடெங்கள் நாடு
இருட்டிப்போகாத நாடெங்கள் நாடு
ஒச்சமில்லாத நாடெங்கள் நாடு
சோதிமயமாய் விளங்குமென் நாடு

4. சஷ்ணத்திரயம் இல்லாதபேர்கள்
இருந்து வாழ்கின்ற நாடெங்கள் நாடு
வாஸனாத்திரயம் போகாத பேர்க்கு
வழிதெரியாத நாடெங்கள் நாடு

5. மந்திரதந்திரங்களாகும் முதலை
மடுவில் விளையாடும் நாடெங்கள் நாடு
சந்ததம் தீபங்களெங்கும் பிரகாசிக்கும்
திறந்தவாசல்கள் விளங்கு மென்நாடு

6. இந்திரியமாகின்ற கள்ளர் தலையை
இழக்கச் செய்கின்ற நாடெங்கள் நாடு
கந்தமாதி சகல விஷயமும்
கிட்டணுகாத நாடெங்கள் நாடு

7. சாந்தியானதோர் சந்தனத்தாலே
மெழுகிக் கோலங்களிட்டே யிருக்கும்
காந்தியானதோர் பட்டுத்துணியால்
கொடிகள் எங்கிலும் கட்டிப்பறக்கும்

8. சற்குணதயென்ற சிரவணப்பொடியை
தரைதனெங்கும் இறைத்தே யிருக்கும்
சொற்கடங்காத வீதிகளெங்கும்
மகாத்தோரணங் கட்டியிருக்கும்

9. பேதமில்லாமற் சந்துக்குச் சந்து
பூர்ணகும்பங்கள் வைத்ததிருக்கும்
தன்யமாகின்ற மேடையின் மேலே
தாளமத்தள வாத்தியமுழுங்கும்

10. ஓங்காரமென்ற சிம்ஹாஸனத்தில்
உபரதியென்ற ஆத்மாயிருப்பர்
ஹ்ரீங்காரமென்ற பூஷணத்தினால்
நிறைந்து அலங்காரம் பண்ணியிருக்கும்

11. ஆசாபாசங்களில்லாத பேர்கள்
அனுதினமும் வஸித்தே இருப்பாள்
போஜனம்பண்ணி பிரும்மரஸத்தைப்
புகழ்ந்து கீர்த்தனம்பாடித் துதிப்பாள்

12. எந்தன் நாட்டு மகிமைகள் தன்னை
வர்ணிக்க முடியாதடியம்மே
எந்தனுக்குத் தெரிந்ததைச் சொன்னேன்
என்று சொல்லியிருந்தாள் குறத்தி

விருத்தம்

6. உத்தமியே உந்தன் ஊர்வளமை தானுரைத்தாய்
பத்தினியே யுந்தன் பரமார்த்த நாமத்தை
நான் கேட்டுமறிந்திடவே கெம்பீரமாக நீ தான்
சற்றே எடுத்துரையாய் என் சிந்தை குளிர்ந்திடவே

குறத்தி புத்தி யென்பவளுக்குத் தன் நாமத்தைத் தெரிவித்தல்

(4-கண்ணிகள்)

1. பரமார்த்தமான எந்தன் நாமம்
அதைப் பார்க்கப்போனால் ஒன்றுமில்லையம்மே

2. ஆனாலுஞ்சொல்லுகிறேன் கேளாய்
அவித்தை நாசமானால் ஏகமானவடிவாம்

3. தானென்குஞ்சைதன்ய ஸ்வரூபம்
பரமாத்மாவே எந்தனுட நாமம்

4. அத்வைதமாம் பணிபூண்டு இருப்போம்
அகண்டாகார விருத்தி என்ற உடையுடுப்போம்

5. ஏகமான வெளிதன்னிலே இருப்போம்
எண்ணமற்ற மலைதன்னிலே வஸிப்போம்

6. சோகமற்ற சுனை நீரைக்குடிப்போம்
சுகதுக்கமொன்றுமகப்பார்ப்போம்

விருத்தம்

7. அகமகிழ்ந்தேன் உன் வரவால் ஆச்சரியம் நானடைந்தேன்
சிறகைவிரித்தாடும் மயிலே குயில்மொழியே
பிடியிடையாயுள்ள பொற்கொடியே நீயுமுந்தன்
மலைவளமை யெல்லாம் மகிழ்ந்தெனக்குச் சொல்வாயே

துறத்தி புத்தி யென்பவளுக்கு தன் மலைவளமை யுரைத்தல்.

(5-கண்ணிகள்)

1. பள்ளம்மேடு அற்றதொரு நிரஞ்சனமாம் மலையே
கள்ளர்பயமற்றிருக்கும் கைலாஸமலையே
2. வெள்ளை சிவப்பு கறுப்பு மூன்று மற்ற மலையே
எங்கும் வெளியாகி நிறைந்திருக்கும் விஸ்தாரமலையே
3. ஆனந்தமாகும் மழை அனுதினமும் பொழியும்
ஆத்மக்யானம் என்னும் பயிர் வளர நன்றாய் காயும்
4. வேதாந்த வாக்கியமென்னும் ஓடை நன்றாய் விளங்கும்
முனிவருடன் யோகிகளும் ஸ்நானம் பண்ணித் துளைவார்
5. சாக்ஷி விகாசமென்னும் தாமரைகள் பூக்கும்
ஆத்மனுத்மா விவேகமென்னும் ஹம்ஸம் விளையாடும்
6. போதமென்னும் மஸ்யம்வந்து முழுகிவிளையாடும்
(பரி) பூர்ணமான ரிஷிகள்வந்து ஸ்நானமது செய்வார்
7. மோக்ஷ இச்சையாகும் மரம் படிய எங்கும் பூக்கும்
சாக்ஷி விருத்தியான பிஞ்சு தளதளென்று பெருக்கும்
8. அகண்ட விருத்தியாகின்றகாய் அழகாக முதிர்க்கும்
திரண்டதொரு துரியவிருத்தி செம்பழங்கள் பழுக்கும்
9. துரியத்துக்கும் அதிகவிருத்தி தேனொழுகக்கசியும்
எங்குஞ் சரியாகி நிறைந்திருக்கும் சமரஸங்கள் பெருகும்
10. ஏகரஸமானமது எங்குமெங்கும் பெருகும்
(பரி) பக்குவமாம் யோகியென்னும் கிளி பழத்தைக் கோதும்
11. பிரமவித்தை யாகுங்குயில் கூட்டமிட்டுக் கூவும்
கர்மமென்னுங் காடிபுலி காதவழியோடும்.
12. மலையினுள்ள வளமை யெல்லாம் வர்ணித்திட வென்றால்
(என்) வாக்கினுலும் சொல்லி முடியாது மதியழகி

(விருத்தம்)

8. அலைகளுக்கு ஆதாரமாயிருக்கும் சாகரத்தின்
கரையினுள்ள பூமியெல்லாம் கண்டுவந்த பெண்மணியே

நிலையாக நீயடைந்த தேசிகனார் பேருமென்ன
அடைவாக எந்தனுக்கு அன்புடனே சொல்வாயே

குறத்தி புத்தியென்பவளுக்கு தன் குருவின் நாமத்தை அறிவித்தல்.

(6-கண்ணிகள்)

1. ஏகமென்று சுருதிகள் சொல்லும் அம்மே
ஈச்வரன்தான் எங்கள் குரு
2. தேகமில்லா விலக்ஷணராம் அம்மே
சித்ரூபர்தான் எங்கள் குரு
3. தன்னை யுபாஸனைகள் பண்ணும் அம்மே
அன்பர்கள்மேல் தயவுடையோர்
4. இன்னதென்று சொல்வதற்கு அம்மே
எட்டாத பெயருடையோர்
5. முக்கிய கர்த்தா என்று சொல்லி அவரை
முமுக்ஷுக்களுஞ் சொல்லிடுவார்
6. ஐக்கிய மாக்கும் குணமுடையோ ரென்று
ஆத்ம நிஷ்டாள்சொல்லிடுவார்

(விருத்தம்)

9. ஆதியாம் வேதாந்த வாக்கிய மெல்லாமறிந்து
ஆதி புருஷனுட அண்டையினில் தானிருந்து
ஓதிப்படித்து உபதேசங் கேட்ட பெண்ணே
(உன்) சாதிவளமை தன்னைச் சலியாமல் சொல்வாயே

குறத்தி புத்தி யென்பவளுக்குத் தன் ஜாதிவளமை யுரைத்தல்

(7-கண்ணிகள்)

1. சாதி வர்ணமேது மில்லை சித்துமய மாயிருப்போம்
தேகதர்மஞ் சற்றுமில்லை ஏகவடிவாயிருப்போம்
2. ஆதியந்த மேதுமில்லை அகண்டவடி வாயிருப்போம்
போதமய மாயிருப்போம் விபூதியும் அணிந்திருப்போம்
3. ஐந்து வித இந்திரியத்தை அடக்கியேமேலாயிருப்போம்
பசிதாக மற்றிருப்போம் பிரமானந்த மாயிருப்போம்
4. நித்திரையற்று சுகித்திருப்போம் நித்தியமெங்கள் சாதிமுறை
நீ முக்தையான படியினாலே விஸ்தரித்துச் சொன்னேன் உனக்கு

(விருத்தம்)

10. உன்னுடைய ஊர்பெயரும் உன்னுபதேசகர்த்தாவும்
உன்னித மாஞ்சாதிமுறை எல்லாமுறைத்தாய் நீ

என்னுடைய ஊர்பெயரும் எனக்குண்டாகும் சங்கதியும்
இத்தையிப்போ நீயுரைத்தால் எனக்குஉன்மேல் பிரீதியுண்டாம்

துறத்தி புத்திபெண்பவளுக்குக் குறிசொல்லுதல்

(8-கண்ணிகள்)

1. உரைக்குகிறேன் கேளடியோ — அம்மே
உந்தனுட வர்த்தமானம் —
2. நிலைக்கவில்லை மனதுனக்கு — அம்மே
நீதிதப்பி அலையுகிறாய்
3. தேகமென்னும் பட்டணத்தில் — நீயும்
வாஸம் பண்ணிக் கொண்டிருக்காய்
4. மோகமென் பாள் தாயுனக்கு — அம்மே
மெல்லியரே புத்தியுன் பேர்
5. சம்ஸாரப்பேய் பிடித்து — அம்மே
சரீரமெல்லாம் ஆட்டுறது
6. அகங்காரமுள்ள மட்டும் — விட்டுப்
போகாமல் பிடித்திருக்கும்
7. எந்தன் வார்த்தை கேட்பையானல் — அது
இப்பொழுதே தொலைந்து விடும்

(விருத்தம்)

11. சொன்னதெல்லாங் கேட்பேன் தொலைந்தால் பிசாசெனக்கு
என் அன்னையைப்போல் வந்து உபதேசம் பண்ணினயே
உன்னையிப் போநாளும் பிடித்தேன் உறுதியுடன்
என்னை ஈடேற்றவந்த ஈச்வரியும் நீதானே

(9-கண்ணிகள்)

1. விஸ்வாஸமாயிருந்து கேட்டகிளிமொழியே
விஸ்தரித்து நன்மைநோக்குச் சொல்லுவேன் கேளம்மே
2. துக்கத்துக்கு ஹேதுவான ஸ்தூலதேகமிதனை
ஜனித்து மறித்திறக்கின்றது தானொருஸம்ஸாரம்
3. ஸம்ஸாரப் பேயுனக்குப் போகவேணு மென்றால்
சைவமந்திரஞ் ஜபித்து விபூதியும் தருவேன்
4. அனுசரித்து எந்தனை நீ இன்னதென்று கேட்டால்
அனுஷ்டானம் பண்ணிவந்தால் அறிவுதானே விளங்கும்

(விருத்தம்)

12. பூமணத்தைக்கண்டு புகழுகின்ற வண்டது போல்
உன் சற்குணத்தைக் கண்டு சந்தோஷமாச் சுகிப்போ

நேம மென்ன செய்வ தென்று நீயுரைத்தாயா மானல்
நானுமந்தநே மத்தை நன்ருகச் செய்து வாரோன்

துறத்தி மதிப்பெண்ணுக்கு உபதேசித்தல்

(10-கண்ணிகள்)

1. புத்திர சம்பத்தையும் போகவிஷயத்தையும்
பந்து மித்ரபோஷணைகள் பண்ணுவதையும்
2. திருச்டமாய் பார்ப்பதையும் விச்வகர் மத்தையும்
துச்சமென்று தானே நினைக்கவேணும்
3. நித்யராய் சுத்தராய் நிற்குணப் பிரும்ம மாய்
சத்யராய் விசித்ராராய் சர்வகுணராய்
4. பக்தராய் முக்தராய் அந்தர் முகப்பார்வையாய்
ஞானம் வரச் சிந்தனைகள் பண்ணவேணும்
5. கண்ணுக்கு ரூபமாய் ஸ்தூலமாய் தானிருக்கும்
தேகத்தின் அபிமானம் விட்டுப் போமா
6. தர்மத்துக் கேதுவாய் சந்தோஷ ஹாரியாய்
தானிருக்கும் அர்த்தத்திருசை போமா
7. அத்யந்தப் பிரீதியாய் ஆயிருக்கும் பந்துக்களின்
அவர்கள் மேலபிமானம் விட்டுப் போமா
8. ஈஷணுத்திரயங்களும் என்னைவிட்டுப்போமோ வென்று
என்று நீ கேட்பையானல் சொல்லுவேன் கேள்
9. (ஒரு) சம்பன்னன் வீட்டிலே யாஜகம் போனக்கே
சாணிலே சரீரத்தை ஒடுக்கிக்கொண்டு
10. (அவன்) உண்டென்று சொல்லுவனே இல்லையென்று சொல்லுவனே
என்று பயந்துமனதி லெண்ணிக் கொண்டு
11. நித்தியமாய் அவனுடைய வீட்டிலே போயலைந்து
இரண்டு கால் வெள்ளெலும்பும் தோணிப்போக
12. துச்சனாய் ஒன்றுக்குமாகாத துஷ்டரிடம்
துதிசொல்லி வாயும்வலி எடுத்துப்போக
13. அவகாசமில்லாத வேளை தன்னில் போனக்கே
அவமானம் பண்ணியே அனுப்பிவிடுவன்
14. கல்லுதன்னில் நாருரித்துக் கண்ட சந்தோஷம்போல்
காசுமொன்று வாங்கியவன் முடிவனனல்
15. (அதை) தர்மத்திலுங்கொடான் தானுமதைச் சாப்பிடான்
மண்ணுங்கீழே மூடிவைத்து வைப்பன்

16. கள்ளன்மார் லக்குவைத்து கன்னம்வைத்து திருடுவாள்
கலகக் காரர்வந்தால் கொள்ளையிடுவார்

17. தாயாதிப் பேர்கள் வந்து சண்டையும் போடுவார்
சமைக்கவைத்த அடுப்பிலும் தண்ணீர் விடுவார்

18. அல்லசல்காரர்களும் செல்வத்தைக் கண்டவுடன்,
அசூயையால் வயிறு வெந்து உப்பிப்போவாள்

19. ஓயாத விசனத்தை உண்டு பண்ணும் சம்பத்து
இருந்தாலும் போனாலும் துக்கந்தானே

20. ஆகையினால் அர்த்தத்தில் அபிமானம் வையாமல்
ஆசையற்று நிம்மதியாய் அறிவையடைவாய்

21. துக்கங்களுண்டுபண்ணும் தனதான்ய சம்பத்தை
துச்சமென்று நீயும் நினைக்கவேணும்

22. புத்திர பௌத்திராதியர் தம்மிடத்தில் பிரீதியாய்
உபகாரம் பண்ணினாலுன்னைப் புகழ்வார்

23. ஆஸ்தி யில்லாவிட்டாலும் அசக்தமான போதிலும்
அவமானம் பண்ணியுன்னை அசங்கதிப்பார்

24. சுக்கில சுரோணிதங்கூடி ஆனதொரு விக்ரகம்
தேகத்தின் அருவருப்பைச் சொல்லக் கேளாய்

25. நரம்பிலும்பு நாடியும் நவத்துவார வாசலிலும்
நாறியே துர்க்கந்தம் வீசி அடிக்கும்

26. வாதமும் பித்தமும் மற்று மந்த சிலேஷ்மமும்
வாட்டியே எப்பொழுதும் வதைத்து வருத்தும்

27. இரத்தமும் அசுத்தமும் மாம்ஸமும் சர்மமும்
மலஞ்சலம் சீழ் கோழை நிறைந்து இருக்கும்

28. எந்தமடி யானாலும் வஸ்திரத்தைக் கொண்டு வந்து
இதின்மேலே யுடுத்திவிட்டால் விழுப்புத்தானே

29. எச்சிலுக்கும் தீண்டலுக்கும் இருப்பான தேகமிது
கொப்புளித்தபின்பு வாயினெச்சில் போமோ

30. பசிதாக வேளை தன்னில் அன்னஞ்ஜலம் போடாவிட்டால்
பல்லை யிளித்துக்கொண்டு மூர்ச்சை போகுமே

31. ஆனாலுமாகட்டும் போட்டாலும் போடுகிறோம்
அநேக நாளிருக்குந் தேகமென்னப்போமோ

32. (அது) இன்றைக்கோ நாளைக்கோ இன்னுஞ் சற்றுப்போதிலோ
இரவிலோ பகலிலோ இப்பத்தானோ

33. ஆகையினால் அஸத்தானதேகத்தி லாசையற்று
ஆத்மாவை நாமென்றறியவேணும்

34. ஒன்றையும் விரும்பாமல் உலகத்தி னாசையற்ற
உத்தம முக்தியை விரும்பி யடைவாய்

(11-கண்ணிகள்)

1. மதியே என் மாணிக்கமே கையைக்காட்டு சொல்லுவேன்
அதிகமாய் முத்தை எனக்கன்புடன் காணிக்கையாய்
2 முன்னிலே கொணர்ந்து வைத்தாயானால் மின்கொடியாளே
தன்னையறியும் உபாயம் சொல்லுகிறேன் நீ கேளாய்
3. பசுபக்ஷிமிருகதேவ மனுஷ்ய சரீரமும்
பலவிதமாயெடுத்து பாழிற்காலம் போக்கினாய்
4 கொசுமழை தூத்தல்களை கூட்டிலக்கமிட்டாலும்
கூடாதுநீயெடுத்தஜன்மம் என்றெண்ணி முடியாது
5. இனிமேலுனக்கு ஜன்மம் வேண்டாம் என்றுயென்னை கேட்டிட்டால்
இன்னதென்றறியவுனக் குள்ளபடிசொல்கிறேன்
6. ஏகாந்தஸ்தானத்திலே இருந்துகொண்டுன்சித்தத்தை
எங்கும்போகாமல்நிறுத்தி ஈச்வரனைஹிருதயத்தில்
7. போதசிந்தனைகள்பண்ணிக்கொண்டு அந்தர்முகமாய்
பிர்மத்தியானம் பண்ணிநித்யம் அப்யாஸமிருக்கணும்
8. இந்தப்படி தானப்பியாஸம் பண்ண ஆரம்பித்தாக்கே
எண்ணிக்கையற்றகோடி விகாதம் வந்துநேரிடும்
9. தடைகளென்னவந்தாலும் சட்டை பண்ணாமல் நீயும்
தன்னைத்தானறிந்தாயானால்முக்தியுமதுதானே
10. உன் கையிலுள்ளரேகைவெகுகல்யாணப்பிரதாபமாய்
இன்பமடையவுனக்கு இலக்ஷணமிருக்குது
11. புத்திசம்பத்தையடைந்து போகத்தில் விரக்தியாய்
அற்புதமாஞ் ஜீவன் முக்த லக்ஷணமிருக்குது
12. பக்தியுள்ள மதியென்னும் பக்குவமாம் பெண்ணுக்கு
பிரமமென்னுங் குறவஞ்சி பக்ஷமாய் கிருபைசெய்தாள்

புத்தியேன்பவள் ஜீவன்முக்தியடைகுதல்

(விருத்தம்.)

13. சொன்ன வுடனே மதிப்பெண் சித்த சுத்தி என்ற முத்தால்
அன்னையென்னும் வேதாந்தக்குறத்திமனங்குளிரவைத்து
சன்னபின்ன லாயடர்ந்த ஸம் ஸ்ாரக்காட்டைவிட்டு
என்னை உன்னையென்பதற்று ஏகவடிவாயிருந்தாள்

புத்தியென்பவள் அகண்டாஹாரமாய் விளங்குதல்

(12-கண்ணிகள்)

1. ஆத்மசிரத்தையானதோர் அகண்டாஹார விருத்தியாகிய சகியை
புத்தியானவள்பிரீதியுடனே பற்றித்தோழமையடைந்தாள்

2. எற்றியேயெளிதாகஜீவன் முக்தியானதோர் புரத்தில்
விரக்தியாகின்றபுருஷனுடன் அத்வைதானந்தமடைந்தாள்

3. வாக்கினால்உச்சரிததும் மனதினாலே எண்ணப்பட்டதும்
கேட்டதும்காணப்பட்டதும் கிரியை யெல்லாஞ்சித்தென்றறிந்தாள்

4, சச்சிதானந்தமூர்த்தியுட சற்குணந்தன்னைப்பாடி
நித்தியானந்தமடைந்தோம் பரதேவிபதம்துணையே

ஓம் தத் சத் பிர்மார்ப்பிதம்.

பார்வதி துணை

அகண்ட வெளிக்குறம்.

(1-வது விருத்தம்)

சதுர்மறை வேதப்பொருளாம் சச்சுதாநந்த வஸ்து
உருவமாய் நாமரூபந்தரித்து உலகுள்ளோர் உய்யவென்றே
குருவாகி வந்துதோன்றிக் குறிசொன்ன தத்துவத்தை
விரிவாக எடுத்துரைக்க விநாயகரை வணங்கினேனே

பார்வதியம்மை குறத்தியாக வருதல்

1. சங்கரியாம் பார்வதியும் குறத்தியாகத் தோன்றி
தன்னைத்தானறியும் வித்தை உபதேசிக்கவந்தாள்
அக்ஞானவேரையவள் அறவேயறுத்தெறிந்து
விக்ஞான மளிக்கவென்று வழியெடுத்து வந்தாள்
2. விவேகமென்னும் பெண்ணருகே குறத்தியவள்வந்து
போதகிலை யுரைக்கவென்றே பிரத்தியக்ஷமாய் நின்றாள்
வந்த குறமாமகளை விவேகம் வரவழைத்து
சிந்தைமிக மகிழ்வடைந்து சந்தோஷமாய் சொல்வள்

2-வது விவேகமென்னும் பெண்மணி குறத்தியை வரவழைத்தல்

(அகவல் மெட்டு)

1 வந்தவகைசொல்வாய் மதியுடைய பூங்குறத்தி
விவேக மறிந்தவள்போல் முன்னே விளங்கி நின்றாய்
(உன்) ஆனந்தப்பேரழகும் ஆபரண பூஷணமும்
காந்தியுள்ளமேனியுடன் கழுத்தில் ரக்ஷமாலைகளும்
2. பூண்டதொரு தாவடமும் பூசியவெண்ணீறுடனே
பேசுமுந்தன் நாவில் பஞ்சாக்ஷரஜபமும்
மாசுமருவற்ற வஸ்துவின் மந்திரமும்
ஜீவன்முக்தர்போல சிறந்த திருவடிவும்
3. சச்சிதானந்தரஸம் ததும்பும் திருமுகமும்
ஒச்சமில்லா ஆகாசம் போலிருக்கும் உள்ளமுடன்

நிற்குணத்திலே லயித்த நிர்மலஞானிகள்போல்
பரமானந்த ரஸத்தில் அமிழ்ந்த பெரியோர்போல்
4. ஈசரடியார்போல எழுந்தருளும் என்குருவே
ஆதரவாய்வந்தவனே அகண்டவடிவானவனே
உந்தனுட ஊர்பெயரும் உண்மையுள்ள உன்வடிவும்
எந்தனுக்குச் சொல்லுமென்க குறத்தியெடுத்துரைப்பள்.

3-வது குறத்தி நாட்டு வளமை யுரைத்தல்

1. பேச்சுஉரையற்றநாடு பிர்மஸ்வரூபமென்நாடு
வார்த்தைப் பிரஸங்கமற்றநாடு வஸ்து விளங்கியநாடு
சாட்சி சைதன்யமாம் நாடு சச்சுதானந்தமாம் நாடு
நாதம்விளங்கிய நாடு நானும் அறிந்திட்ட நாடு
2. ஜோதிர்மயமான நாடு சுப்பிரகாசமான நாடு
உள்ளாகக் காணுமென்நாடு யோகிகள் சிந்திக்கும் நாடு
தானாகப்பாவிக்கும்நாடு சற்குருவவிக்கும்நாடு
நீ நானென்றில்லாதநாடு நிர்மலமான தென்நாடே.

(வேறு மெட்டு)

3. பிர்மமென்பதோர் நாடெங்கள்நாடு
பேச இரண்டில்லை நாடெங்கள்நாடு
அன்னைபார்வதி பாகனிடத்தில்
அறிவாம் ஜீவன் ஐக்கியமாம் நாடு
ஆதிதேசிகர் போதனை கேட்டு
அலையுஞ்சித்தம் நிலைநின்றநாடு
ஆனந்தமாகின்ற நாடெங்கள்நாடு
அவஸ்தைமூன்றும் அகற்றியநாடு
4. கோசமைந்தும் குணத்திரய மூன்றும்
குலைந்து கெட்டு நசித்திட்டநாடு
சாட்சியாகிய நாடெங்கள் நாடு
சின்மயானந்தம் பெருகுமென் நாடு
தேசிகர்தந்தநாடெங்கள் நாடு
ஜனனவேரை யறுத்திட்ட நாடு
ஆகாயம்போல் வெளியாகிய நாடு
அர்க்கசந்திரன் உதயமாகு மென்நாடு
5. நிராசைகளற்ற நித்தியயோகியர்க்கு
இரவுபகலற்ற ஏற்றமாம் நாடு
மோகங்கள் போக்கியே ஆசையொழிக்கும்
மூலமருந்தை அறிவிக்கும் நாடு

ஆசையாகின்ற அந்தகாரம் நீங்கி
அகண்டவெளியாகத் தோன்றுமென்நாடு
எங்கள் பிராரப்தம் போக்கிடும் நாடு
ஏகவெளியாய் விளங்கியநாடு
6. பட்டகாஷ்டத்தில் அக்கினிபட்டு
பற்றியே சருகாகுமாம் போல
பக்தியாலீசன் பாதத்திலே மனம்
பற்றினால் ஜன்மம் போக்கு மென் நாடு
நாதன் சற்குரு நன்மொழிநாடி
நாலாம்பதத்தை யளித்திடும் நாடு
ஸ்வஸ்வரூபமதாகிய நாடு
சொற்கடங்காத துல்யமாம் நாடு
7. பக்திபண்ணியே தன்னுக்குள் தானாய்
பராபரமாகத் தோணு மென்நாடு
சங்கமற்றோர் நாடெங்கள் நாடு
அசஞ்சலமான ஆனந்தநாடு
சந்தேகங்களற்ற தற்பொருளானோர்க்குத்
தானேசாட்சியாகத் தோன்றிடும் நாடு
நிற்குணமான நாடெங்கள் நாடு
நிரூபாதியாகும் நாடெங்கள் நாடு
8. துச்சமாகுமிந்த ஸம்ஸாரந்தள்ளி
சுயம்பிரகாசமாய்த் தோன்றிடும் நாடு
நன்மையாமிந்த நாட்டையறிந்து
நானேநானென்றறிந்த ஜீவர்கள்
அன்னைபாழ்கும்பி தன்னில் விழாமல்
அகண்டசாக்ஷிஸ்வரூபமடைவார்
கேளும்விவேகமாம் மங்கையே கேட்டு நீ
கதியடையென்று குறத்தியுரைத்தாள்
9. நாமமில்லாத நாட்டுமகிமையுன்
நன்மையை நாடியே நானுமுரைத்தேன்
பாடகந்தண்டை சலங்கைகுலுங்க
பார்வதியாகிய பிரமக்குறத்தி
நாடகமான பிரபஞ்ச நடத்தையை
நாடாதிருக்கவே நற்போதஞ்சொல்லி
தானே தானாகி யகண்டவடிவாய்
சாந்தியமாகவே தேவியிருந்தாள்

விவேக மென்னும் பெண்மணி குறத்தியைக் கேட்குதல்

(4-வது விருத்தம்)

1. பேரால் பெருமைபெற்ற பூங்குறத்தி பேசலுமே
மேலாம் மதியுணர்ந்த விவேக மென்னும் பெண்ணரசும்
ஆரம்மா நீரும் அகண்டவடிவாய் விளங்கிப்
பேரானந்த மளிக்க வந்துதித்த பூங்கொடியே

2. அண்டாண்டப் பேருலகில் அறிவுடையபேர்களிலும்
பண்டு சொன்னபக்தாளாய்ச் சென்ற பலபேர்களிலும்
தொண்டராய் வந்துதித்த ஜீவன்முக்தாள் தங்களிலும்
அகண்டசச்சுதானந்த மகிமை சொன்னோர் யாருமில்லை

3. பக்தாளு முண்டு பிரமையொழித்த ஞானியுண்டு
இச்சையுடன் ஈச்பரனை பூஜித்தோரெங்கு முண்டு
சச்சுதானந்த ரூபமாய் விளங்கும் தார்குழலே
உச்சிதமாயுன்னுடைய பெயரை யெடுத்துரைப்பாய்

குறத்தி பெயர் ஊர்முதலியவையுரைத்தல்

1. பேருமில்லை ஊருமில்லை பிரும்மமயம்தானே
வீடுமில்லை வாசலில்லை வெட்டவெளி யானே
சித்தமில்லை சிந்தையில்லை சிதாகாச மானேனே
பித்துமில்லை பிரமையுமில்லை பெரும் வெளியானேனே

2. தந்தையில்லை தாயுமில்லை தானே தானேனே
பந்துவில்லைப் பந்தமில்லை பரவொளியும் நானே
மாசுமில்லை மருவுமில்லை வஸ்து வொளி நானே
ஜோதிமயமாய் விளங்கும் சுகஸ்வரூபமானேன்

3. இரவு பகலற்றிருக்கும் சுயஞ்சோதி யானேனே
அகண்டவெளிதனையடைந்த பரமானந்தம் யானே
ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல அறிவாய்
ஸ்நானபான சத்கர்மத்தின் பலன் புஜிக்கவறியேன்

4. ஜபதபங்கள் செய்துவரும் பிரும்மசாரிதானுமல்ல
நற்கர்மங்கள் செய்துவரும் சத்கிரகஸ்தனல்ல
மனைவியுடன் வனம் வசிக்கும் வானப்பிரஸ்தனல்ல
தவஸியாகி ஸஞ்சரிக்கும் சந்நியாசியுமல்ல

5 மனுஷ்யவர்க்கம் நானுமல்ல பக்ஷியும் நானல்ல
மண்ணுலகில் ஸஞ்சரிக்கும் மிருகவர்க்கமல்ல
தரணி தன்னில் ஊர்ந்து செல்லும் ஜந்துக்கள் நானில்லை
செடிகொடிகள் மலைமுதலாம் ஸ்தாவரம் நானில்லை

6. மகாப் பிரளயம் உண்டு பண்ணும் மாய்கையும் நானில்லை
மஹாதேவர் விஷ்ணுபிரும்மாமும்மூர்த்தி நானில்லை
சிந்தையற்ற பிரஹ்மமய சுகஸ்வரூபம்நானே
அந்த மாதிரவுமற்ற அகண்டவொளிநானே

(5-வது விருத்தம்)

பேருமில்லை யென்றாய் பிரம்ம வடி வென்று சொன்னாய்
ஈச்பரனே எந்தனுக்கு ஏற்றகுரு வென் றுரைத்தாய்
ஸ்தூல முண்டாகியன்றோ ஞானம் வந்த துன்னிடத்தில்
சூக்ஷ்ம மறிந்த விதம் சொல்லுவாய் பொற்குறத்தி.

குறத்தி தன்னுடைய சற்குரு மகிமையுரைத்தல்.

1 விவகாரதசை தனிலே ஈசர்குருவானோர்
விவேகத்தால் பார்ப்பளவில் குருவும் வெட்டவெளியே
அவரேகுரு சிஷ்யையும் நான் அறிவு வருந்தனிலும்
ஆத்மாஜீவாத்மாவில்லை அக்கியானங்களொழிந்தால்

2. ஜன்மவேரையறுக்கும்படி சிவனுரைத்த வாக்கியம்
எவர்களுக்கு மெடுத்துரையேன் உனக்கித மாயுரைத்தேன்
அனுக்கிரகித்து எந்தனிடம் ஹரனுரைத்த வாக்கியம்
அன்புடனே யுனக்குரைக்க ஆதாவாய் வந்தேன்

3. இருதய மதின் இருள் நீங்கி ஏகவெளியானால்
உதயமாகும் அறிவுதானே சொரூப மென்று வுரைத்தார்
காணுகின்ற பிரபஞ்ச சுகம் கற்பிதமே யென்றார்
கரைகாணு அகண்டவொளி சொரூப மென்றே குறித்தார்

4. அஸிபதத்தின் சுயவடிவை அறிய வெனக்குரைத்தார்
ஆரணங்கே என் கணவர் அகண்டவொளி நாதர்
பஞ்சேந்திரியங்களையும் பகுத்தறியச் சொன்னார்
உண்டான விடத்தில் ஜீவன் ஒடுங்கு மென்றே யுரைதகார்

5. கடம் உடைந்து மடமிடிந்து காணும் வெளிபோலே
உடல் நசித்து ஜீவாத்மா ஒடுங்கு மிடமுரைத்தார்
சர்வக்ஞராய் மும்மூர்த்திகள் சுயேச்சையுடனிருப்பார்
கிஞ்சிக்ஞராய் தொம்பதத்தில் ஜீவன் கிடந்துயலும்

6. தொம்பத ஜீவாத்மாவை தத்பதமாம் வெளியில்
நாமரூபம் தள்ளிப் பார்த்தால் நிற்குணமே நிலைக்கும்
பிரும்மமே அஸ்மியென்று பிறப்பொழிப்பா யென்றார்
பேதமொன் றுங்காணு யென்று பரமரெனக்குரைத்தார்
வந்ததோர் என்வடிவும் அகண்டவடிவாகும்
விவேகமென்னும் உந்தனுக்கு மதியுரைக்க வந்தேன்

(6-வது விருத்தம்)

கொம்பனையே யுந்தன் குலநலமும் நானறியேன்
குறக்குலமோ அல்லவென்றால் மேன்மையுள்ள நற்குலமோ
குற்றமற்ற ஈசபரனை சற்குருவாய்க் கூறுகின்றாய்
குடிநலமுங் கோத்திரமுங் கூசா தெடுத்துரைப்பாய்

குறத்தி தன்னுடைய குலவளமை யுரைத்தல்

1. குடிநலமுங் கேட்டாய் நீ கொண்டல்வர்ணர் தங்கையும் நான்
குணதீதமான பிரமக் குணவடிவாய் வந்தவள் நான்
ஜன்மமற்ற பிரமமும் நான் ஜீவபரான் சாட்சியும்நான
அகிலலோகம் நிறைந்திருக்கும் ஆதிவஸ்து வானவற்கு
2. ஹரனென்னும் ஈசருக்கு அகண்டமென்னும் வடிவமும் நான்
அவருடைய அனுக்கிரகத்தால் ஜன்மவேரை யழிப்பவள் நான்
பராபரனும் ஈசருடைய பாகந்தன்னில் வசிப்பவள் நான்
மழுவேந்தும் ஈசருடைய வாமபாகத்திலிருப்பவள் நான்
3. விச்வமெல்லாம் ஒன்றாய் விளங்கி விபூதி தரிப்பவள் நான்
உலகமெல்லாம் தானாய்விளங்கி ருத்ராக்ஷம் அணிபவள் நான்
எந்தனுடைய அடியாருக்கு ஈசருடைய கருணையினால்
இன்பமுள்ள அகண்டரஸம் இச்சைதீர அளிப்பவள்யான்

(7-வது விருத்தம்)

அகண்டரஸமளித்த ஆனந்தத் தாண்டவர்க்கு
ஆசார்யனென்னும் அகண்டவொளி யானவர்க்கு
கனிந்த பழவகையோ கற்கண்டோ தேன்பாகோ
என்ன பதிலளித்தாய் எடுத்துரைப்பாய் பூங்குறத்தி

குறத்தி தான் சற்குருவுக்கு அளித்த காணிக்கையை உரைத்தல்

1. அன்னமுடன் பால் பழங்கள் அகண்டருக்கோ அளிப்பேன்
அதீதமென்னுங் குருநாதர் அடிமலரைத் தொழுவேன்
பரனுடைய பாதரஸம் புஜித்துருஜி பார்ப்பேன்
பக்தியுடன் துதித்துமவர் பாதத்தூள் அணிவேன்
2. நன்மையுடன் தொண்டுசெய்து நமஸ்கரித்துப் பணிவேன்
நானவர்க்குக் கொடுப்பதில்லை புஜித்திடவும் நினையார்
அவரெனக்குக் கிருபையுடனே ஆத்மபோத மளிப்பார்
அதற்கெதிராய் எந்தனிடம் பிரதிபலனை யடையார்
3. வள்ளியம்மை கிருபையினாலே குறக்கூடையை வாங்கி
வள்ளல் குரு சிவனுரைத்த வாக்கியக் கோல்பிடித்து

அண்டசண்ட பிரமாண்ட லோகமெல்லா மடைந்து
அன்புடைய அடியாருக்குக் குறிகள் சொல்லவமைந்தேன்
4. தொண்ணூற்ருறு தத்துவமாம் சேவகரை ஜெயித்து
தன்னையே தானறியும்படி தகுந்தகுறி சொல்வேன்
அனவரத கணபதியும் அமரர் சேனுபதியும்
அழகுடைய சிறுவராக எந்தனுக்கே யமைந்தார்
5. ஆதிசக்தி பார்வதியும் லக்ஷ்மிசரஸ்வதியும்
அன்புடைய தோழிகளாய் என்னையடைந்திருப்பார்
சந்ததமும் வேதங்களை மாலைகளாய் தரிப்பேன்
சாஸ்திரங்கள் உபநிஷத்தை தாவடமா யணிவேன்
6. கோசங்களைக் குலைத்தெறிந்து ஆசைதன்னைக் களைந்து
பாசங்களை யகற்றிவிட்டு பிரமமாகச் செய்வேன்
அவித்தைதன்னை நிவர்த்தி செய்து அக்ஞானத்தை யொழித்து
அகண்டவெளிப் பழரஸத்தை அடியார்களுக் களிப்பேன்

(8-வது விருத்தம்)

அருமையுடன் நீ புஜித்த அகண்டரஸ நற்பழத்தை
இருமைப் பிணிநீங்க எந்தனுக்குத் தந்திடுவாய்
பாதிப்பழத்தை பகிர்ந்தெனக்குப் போட்டாமல்
பூரணமாய் பழமளித்து போதம் வரச்செய்திடுவாய்

குறத்தி அகண்டரஸப்பழத்தின் மகிமையுரைத்தல்

1. வெளியான பழமிதையும் விவேகத்தினலறிவாய்
ஒளியான நற்பழத்தை உண்மையினல் உணர்வாய்
வேதமென்னும் பழரஸத்தை விசாரணையா லடைவாய்
போதமென்னுங் கனிரசத்தை புத்தியினல் காண்பாய்
2. நாமரூப மற்றிருக்கும் நான்புசிக்கும் பழமே
பாமரரால் பறிக்கவொண்ணு விசித்திரமான பழமே
அந்தரமாம் ஆகாசத்தில் அளிந்துதொங்கும் பழமே
எந்தனுட நாவில்ருஜிக்கும் இரஸம் ஒழுகும் பழமே
3. பக்திபண்ணி ஈசருடைய பாதங்களைப் பணிந்தோர்
இச்சையுடன் எடுத்தருந்தும் இன்பரஸப்பழமே
தேஜோன் மயமான பழம் சித்த சுத்தியடைந்தோர்
ஆசையுடன்எடுத்தருந்தும் அகண்டரஸப் பழமே

9-வது விவேகமென்னும் பெண்மணி கேட்குதல்.
(விருத்தம்)

எத்துகிருய் என்னை இளமையுள்ள பூங்குறத்தி
மெரட்டுகிருய் வேதப்பழத்தை மறைத்துவைத்து

அகண்டமென்னும் த்வைதப்பழத்தை யெனக்களித்து
ஆத்மக்கியானமடைய அனுக்கிரகிப்பாய் ஆரணங்கே.

1. விச்வமெல்லாம் ஒன்றாகி விளையாடுந்தேவி
மொட்டுகின்றீர் ஜகமிதனை மாய்கையினால்மயக்கி
பாலகனைத்தாயமுக்கிப்பால் போட்டும்முறைபோல
பார்வதியே எந்தனுக்குப் பக்திப்பழமளிப்பீர்,

2. வேண்டுகின்றேன் உன்பதத்தை விவேகமாகுமென்னை
ஆண்டுகொண்டு அடிமையாக ஸ்வானுபவமருள்வீர்
கந்தபிரானுகந்தேற்றும் அன்னையே நீர் கேளீர்
சொன்னபடியெந்தனுக்கு வேதப்பழந்தருவீர்.

3. ஆற்றமாட்டேன் பார்வதியே அருள் பொழிந்தேயருளும்
போற்றுகின்றேன் திருவடியில் உமது ஐக்கியம் பெறவே
நீயென்றும் நானென்றும் பேத நிலையை விட்டுநீக்கி
நிற்குணத்தில் நிலைக்கச்செய்வீர் நீலகண்டர்தேவி

4 இருக்குமிடமேதுமற்று என்னையுணராமல்
எடுத்தெடுத்து நானலைந்த ஜன்ம மிதுபோதும்
சங்கராம் சற்குருவை தன்னிலறியாமல்
தெளிவிழந்து மயக்கத்தினால் ஜனித்ததுவும்போதும்

5. மகமாய்கை தனில் மூழ்கி அறிவிழந்து மயங்கி
வஸ்துவை நானறியாமல் தத்தளிக்கும் மளவில்
முக்திபத மளிக்கவென்றே மூர்த்தியாய் முன்வந்தீர்
சித்தமதைத் தெளியவைத்தீர் சற்குருவே எனக்கு

6. கடலின் அலைதனையெடுத்து கயிற்றினில் கோர்த்தாலும்
காவேரி மணலை எண்ணி கணக்காய்ச் சேர்த்தாலும்
பிரபஞ்சத்தில் நானெடுத்த ஜன்மம் பார்த்தெண்ணவும் போமோ
பக்ஷியாக எடுத்த ஜன்மம் மட்டுமிதமாமோ

7. விருக்ஷமாகி நின்ற ஜன்மம் வேணதுண்டு தாயே
புற்பூண்டாய்க் கிடந்ததெல்லாம் போதும் போதும் அம்மா
பரமாத்மா நானேயென்று பார்த்து உணராமல்
பலவிதமாய் ஜன்மித்து நான் பிரபஞ்சவசமானேன்

8. மஹாதேவர் கருணையினால் மதிமயக்கந்தெளிய
வண்ணமுள்ள குறத்தியாகி எந்தன் முன்னே வந்தாய்
சொல்லுமுந்தன் வாக்கியத்தால் சிந்தை மயலொழிந்தேன்
எண்ணுமலேயானெடுத்த ஜன்மங்களுமிழந்தேன்

9. ஜீவனுடன் ஆத்மாவுக்கும் ஜகப்பிரபஞ்சந்தனக்கும்
பேதமில்லை யென்றுரைக்கும் புத்தியை நானடைந்தேன்

ஆசையென்ற பாசங்களை அறுத்து மனந்தெளிந்து
அகண்டமென்னு மானந்தத்தில் அமிழ்ந்து மகிழ்வடைந்தேன்

10. சித்துமயமாம்அவித்தை நித்தியமேயானால்
ஜகத்திலுள்ள பிரபஞ்சமாய்கை நிச்சயமதாகும்
ஸ்வப்பனத்தில் கண்டவஸ்து நித்தியமென்றுசொன்னால்
தோன்று மிந்தப்பொய்யுலகம் நிச்சயமதாகும்

11. ஜீவாத்மாபரத்துடனே சேர்ந்தயிக்கியமானால்
திரும்பியிந்தப் பிரபஞ்சத்தினில் ஜனித்திடாதென்றறிந்தேன்
அப்படியே என்மனதின் பிரபஞ்சவாசையகற்றி
ஆதியான அகண்ட ரஸப்பழத்தை யெனக்கருள்வீர்

12. பரிவுடனே எனக்குவந்து உபதேசமுஞ்செய்தீர்
பராபரவஸ்துவென்னும் பூரணத்தில் சேர்ப்பீர்
சம்ஸாரக்கடல் கடக்கத் தோணியாகவிருந்து
சச்சுதானந்தமென்னும் அகண்டமதில் சேர்ப்பீர்

10-வது விருத்தம்

பிரியமாய் விவேகமென்னும் பெண்மணியுரைக்கக்கேட்டு
விவரமாய் யோகந்தன்னைக் குறத்தியும் விளம்பவென்றே
சிரவணத்தின் அனுபோகத்தால் உன் சித்தமும் சுத்தமாகி
மனனத்தைச்செய்துகொண்டு சஞ்சலமகற்றுவாயே.

குறத்தி உபதேசித்தல்

கண்ணிகள்.

1. விருதாவாய் உன்பொழுதை வீணிலழிக்காமல்
விச்வமெங்கும் நிறைந்தவனை விசாரணையாலறிவாய்
க்ஷுத்பாதை நிமித்தியமாய் சோகமடையாமல்
கிட்டின பதார்த்தங்களை கவலையற்றுப் புசிப்பாய்.

2. அன்னமுடன் காய் கிழங்கு அகப்பட்டதையருந்தி
இன்னவகை வேணுமென்ற இச்சைதனையொழிப்பாய்
தொண்ணூற்றாறு தத்துவத்தின் சன்னபின்னலைத்தாண்டி
ஸ்தூலதேக ஆபாஸத்தின் பந்தமதைத் தவிர்ப்பாய்

3. ரோமமுடன் நரம்புகளும் எலும்புகளுஞ்சேர்ந்து
நவத்துவார வாசலமைந்து இரத்தங்களும் நிறைந்து
ஒக்காள மெடுக்கவரும் உள்ளே கிள்ளிப்பார்த்தால்
உடலாகிய மாம்ஸதேக உறவுதனையொழிப்பாய்

4. எழுபத்தோராயிரத்து மூச்சுக்காற்றையிழுத்து
இந்ததேகத்தின் அசுத்தக்காற்றை இழுத்துவெளியில் அகற்றும்
பந்தமாகிய பிராணவாயுவை பிங்கலையில்பொருத்தி
பூர்ணயோக நிலையறிந்து பிரமநிலைபெறுவாய்.

5. மனனம் பண்ணியறிவைக்கொண்டு வஸ்து நிலையுணர்ந்து
அகமொழிந்து அகண்டவெளி அதீதந்தன்னையடைவாய்
சச்சுதானந்தமயமாகி சஞ்சலங்களொழிந்து
அச்சமற்று அகண்டமதின் வஸ்துவை நீயடைவாய்

11-வது விருத்தம்.

மெய்யானநல்லறிவே விவேகமென்னும் மெல்லியரே
கைலாஸபர்வதத்தில் காக்ஷிபெற உன்கருத்தோ
வைகுண்ட லோகமதில் வசிக்கமனதுமுண்டோ
சத்தியலோகமடைந்து வசித்திருக்கச் சம்மதமோ
ஸ்வர்க்கலோகமடைந்து சுகித்திருக்கச் சிந்தையுண்டோ
தத்பதத்தில் முக்திபெறச் சம்மதமோ சொல்வாயே.

விவேகப்பெண் சொல்லுதல்.

1. மாய்கைதன்னை யொழித்தாய் எந்தன் மனதின் நிலையுணர்ந்தாய்
வானவர்க்கும் மேலான வாழ்வை யெனக்களிப்பாய்
மஹாதெவர் தேவியுடன் வாழ்ந்திடுங்கைலாஸம்
மஹாவிஷ்ணுலக்ஷ்மியுடன் வாழ்ந்திடும் வைகுண்டம்

2. சிருஷ்டிகர்த்தாவாணியுடன் இருக்கும் சத்தியலோகம்
தேவதைகள் வாஸம்பண்ணும் தேவேந்திரன் உலகம்
மட்டில்லாத பலனளிக்கும் ஸ்வர்க்கலோக வாழ்வும்
வஸ்து நிலையறியாதவர் இச்சைவைத்துவாழ்வார்.

3. இவ்வுலகுப்போகமெல்லாம் இரும்புவிலங்காகுல்
பொன்னுலகுப்போகமெல்லாம் பொன்விலங்குபோலாம்
ஜீவன் முக்திசேரவென்றால் ஸ்வர்க்கம் நிலையாமோ
ஜகதீச்வரி எந்தனை நீர் சோதிக்கவும் வேண்டாம்.

4. எண்ணறிய தானம் யாகம் ஜபதபங்கள் இயற்றி
பண்ணி நின்ற கர்மங்களின் பலனுண்டாகும்போதும்
கண்ணில்லாத அந்தகன்போல் கர்மங்களைப்புசித்து
எண்ணில்லாத பிறவி தன்னை எடுத்த தினிப்போதும்

5. வஸ்துவே நீர் குறத்தியாகி சற்குருவாய் வந்தீர்
உத்தமியே உமக்களிக்க ஒருபொருளுங் காணேன்

சத்தியமாய் நான் புரிந்த கர்மபலன் தந்தேன்
தத்பதமாம் சாயுஜ்யத்தில் ததாகாரவெளியடைவேன்

12-விருத்தம்.

குருவாகி வந்தெனக்கு கிருபைசெய்தபொற்குறத்தி
அறியாமையென்னும் மயக்கம் அகற்றிவைத்தாய்.
ஆனந்தமாம் பிரம ஸாகரத்தில் மூழ்கவைத்தாய்
அகண்டவெளிகாட்டி நின்ருய் பழமளிப்பாய் ஆசனங்கே.

(கண்ணிகள்)

1. மாசில்லாத பேரழகும் மதிமுகமும் — அம்மன்
தேஜோன் மயமாய் விளங்கும் திருவொளியும்
நிகரில்லாத கிருபை பொழியும் நீலவிழியும் — அம்மன்
நெற்றியினில் பொட்டழகும் ரத்தினமுடியும்

2. சந்திர பிரபை சூர்யபிரபை சுட்டியொளியும் — அம்மன்
தளதளென்னுந் தாடகமும் திருச்செவியும்
சண்பகத்தின் முகிழ்ப்போல திருநாசியும் — அம்மன்
சிவந்த அதரம் நடுவில் தந்தப் பந்தியும்

3. வலம்புரிச்சங்கம் போல் விளங்கும் கழுத்தும் — அம்மன்
வண்மையுள்ள முத்து ரத்தினமாலை யொளியும்
சிவந்த இளநீர்க் குலைபோல் ஸ்தனத்தழகும் — அம்மன்
திருமார்பில் சிந்தாமணி ரத்தின மாலையும்

4. திருக்கையில் கடகம்வளை தோளணிகளும் — அம்மன்
திருமருங்கில் ஒட்டியாணம் மேகலை மின்ன
அழகாய்ச் சிலம்பணிந்த அன்ன நடையும் — அம்மன்
ஆதியென்னும் பரதேவி அகண்ட மாகினள்

5. அகண்ட வடிவாகிய ஆதிசத்தியே — எங்கள்
ஆதிசிவன் கண்டுகக்கும் அபிராமியே
மன்மதனைச் சுட்டெரித்த மஹாதேவராம் — ஈசன்
வசமாய் உனக்கு வேதப்பழமளித்தார்

6. ஆசையற்றார்போலிருந்து ஆதிசிவனும் — உம்மை
நேசத்துடன் நிற்குணத்தில் நிலைக்கவைத்தார்
சாக்ஷியாகி எந்தனுக்குக் குறியுஞ்சொன்னீர் — தாயே
கருணையாகக் கைவல்யப்பழத்தை யருள்வீர்

சச்சுதா

2\. வாய்திறக்கவழியுமில்லை மௌன சங்கற்பமில்லை
வந்ததில்லை போனதுமில்லை
ஆதியந்த நடுவுமில்லை ஜோதியான உருவுமில்லை
உபாதியில்லை உன்னிடத்திலே
வாதுசெய்யும் மாய்கை தன்னால் பேதமான கற்பனையே
புதுமையிது புதுமையிதுவே ஆ ஆ ஆ

சச்சுதா

உட்புறமும் உயரங் கீழ்திசை திக்கெட்டும் பூரணமாய்
ஒளியாகி வெளியுமாகி
நிற்குண நிராபாஸ நிர்மல நிராதார
பிரஞ்ஞானப் பரஞ்சோதியாய்
அத்வைத அகண்டராய் அஜிபதலக்ஷியாதாராய்
அபரோக்ஷ சுகமாகியும் ஆ ஆ ஆ

சச்சுதா

(ஓம்தத்சத் பிரமார்ப்பிதம்)

விளம்பரம்.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாளால்,

பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள்.

1.	வால்மீகி ராமாயணப் பாட்டும் ஞானராமாயணக் கப்பலும் (3-ம் பதிப்பு)	0	3	0
2.	குசலவ வாக்கியம் (4-ம் பதிப்பு)	0	3	0
3.	அனந்தங்காடு (4-ம் பதிப்பு)	0	2	0
4.	ஸ்ரீபார்வதியம்மன் சோபனம் (2-ம் பதிப்பு) ...	0	3	6
5.	வேதாந்தப் பாட்டுகளும், தினசரி ஸ்தோத்திரங்களும் (2-ம் பதிப்பு)	0	2	0
6.	ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுகளும் பஞ்சீகரண மகா வாக்கியமும் (2-ம் பதிப்பு)	0	4	6
7.	பஞ்சீகரண கட்டம்	0	0	6
8.	சாவித்திரி பாடம் (2-ம் பதிப்பு)	0	1	0
9.	ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவி பாடமும் (3-ம் பதிப்பு)	0	5	0
10.	ஐந்து கும்மிகள் (2-ம் பதிப்பு)	0	2	0
11.	குறவஞ்சி (மூன்று குறங்க ளடங்கியது) ...	0	3	0

மேற்கண்ட புஸ்தகங்களை இவ்விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்:—

V. S. வாலாம்பாளம்மாள்,

8, தொளசிங்கப் பெருமாள் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.